Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 174 05.02.2026 வியாழக்கிழமை
Chennai Volume: 01 Issue: 174 Thursday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(5-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை -22
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தி பின்னிரவு 3.11 வரை பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்:
உத்திரம் நள்ளிரவு 1.41 வரை பிறகு அஸ்தம்.
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30-3.00 மணி.
எமகண்டம்
காலை 6.00-7.30 மணி.
சூலம் - தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9-10 மணி.
மாலை 4-5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | ஆக்கம் |
| மிதுனம் | ஆதரவு |
| கடகம் | நலம் |
| சிம்மம் | பக்தி |
| கன்னி | சிறப்பு |
| துலாம் | போட்டி |
| விருச்சிகம் | வாழ்வு |
| தனுசு | மகிழ்ச்சி |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | மாற்றம் |
| மீனம் | பணிவு |

# ‘என் கனவு என் எதிர்காலம்’ திட்டத்தை தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்!





**விழுப்புரம்,பிப்.5:**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற அரசு விழாவில் ‘என் ஊர் என் எதிர்காலம்‘ என்ற திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் 2025, ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் முகாம் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது. மொத்தமாக 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்ட நிலையில், அந்த முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் அடிப்படையில் நலத்திட்டங்கள், பயன்கள் வழங்கும் விழா, 1.80 லட்சம் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கும் விழா, ‘என் கனவு என் எதிர்காலம்‘இணையதளத் தொடக்க விழா மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் முடிவுற்ற பணிகள் தொடக்க விழா மற்றம் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை (பிப்.4) நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம்-செஞ்சி சாலையில் கொள்ளார் கிராமத்திலுள்ள சிப்காட் வளாகத்தில் நடைபெறும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, நலத்திட்டப் பயன்களையும், சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்களையும் வழங்கி, ‘என் கனவு என் எதிர்காலம்‘என்ற திட்டத்தில் இளைஞர்களின் கனவுகளைப் பதிவு செய்ய உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நல உதவிகளை முதல்வர் வழங்கினார்.

முன்னதாக திண்டிவனத்தில் அன்னை இந்திராகாந்தி பேருந்து நிலையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். விழாவில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து புதன்கிழமை காலை புறப்பட்டு வந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விழுப்புரம் மாவட்ட எல்லையில் திமுக சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பைத் தொடர்ந்து திண்டிவனம் தீர்த்தகுளத்திலிருந்து செஞ்சி சாலை காந்தியார் திடல் வரை சாலை வலத்தை மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் விழா நடைபெறும் பகுதியை வந்தடைத்தார். அரசு விழா முடிந்த பின்னர் சாலை மார்க்கமாக மீண்டும் சென்னைக்கு முதல்வர் புறப்பட்டுச் சென்றார்.

முதல்வர் வருகையொட்டி விழா நடைபெறும் பகுதி, திண்டிவனம் பகுதிகள், முதல்வர் வரும் வழித்தடப் பகுதிகளில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## இரண்டாம் கட்ட வாக்குறுதிகள் வெளியிட்டது அதிமுக

# முதியோருக்கு ரூ. 2,000; கல்விக் கடன் ரத்து; 3 சிலிண்டர்கள் இலவசம்!

**சென்னை,பிப்.5:**

அதிமுக ஆட்சிக்கு வந்தால் முதியோருக்கான மாத ஓய்வூதியம் ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகவிருக்கும் நிலையில், அதிமுகவின் இரண்டாம் கட்ட வாக்குறுதிகள் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய எடப்பாடி பழனிசாமி தெரிவித்ததாவது:

“அதிமுக ஆட்சிக்கு வந்தால் முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ. 2000 ஆக உயர்த்தப்படும். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 1,200-இல் இருந்து ரூ. 2000 ஆக உயர்த்தப்படும்.

மாணவர்களின் வங்கிக் கல்விக் கடன் ரத்து செய்யப்படும். அந்த தொகையை அரசே ஏற்கும்.

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆண்டுக்கு 3 சமையல் சிலிண்டர்கள் இலவசமான வழங்கப்படும்.

ஜல்லிகட்டில் உயிரிழப்போரின் குடும்பங்களுக்கு நிவாரணமாக ரூ. 10 லட்சமும், காயமடைந்தோருக்கு ரூ. 2 லட்சமும் வழங்கப்படும். அரசாணை வெளியிட்ட இடங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு அரசு சார்பில் ரூ. 5 லட்சம் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இஸ்லாமிய உள்ளிட்ட சிறுபான்மையின பெண்கள் சுயதொழில் தொடங்க வட்டியில்லா கடன் வழங்கப்படும்” எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, கடந்த ஜன. 17 ஆம் தேதி முதல்கட்டமாக 5 தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவை, மகளிர் உதவித்தொகை ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும், ஆண்களுக்கும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லை, கிராமப்புறங்களில் வீடுகள் இல்லாதவர்களுக்கு அம்மா இல்லம் திட்டம் சார்பில் நிலம், நகர்ப்புறங்களில் வசிக்கும் வீடுகள் இல்லாதவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள், 150 நாள்கள் வேலைத்திட்டம், 5 லட்சம் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

# விஜயை புகழ்ந்து முருகன் பாடல்: நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டார் பாடகர் வேல்முருகன்

**சென்னை,பிப்.5:**

தமிழக வெற்றிக் கழகத்தின் 3-வது ஆண்டு தொடக்க விழா சென்னையை அடுத்த பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் கடந்த 2 ஆம் தேதி நடைபெற்றது. விழாவில் நடந்த கலை நிகழ்ச்சியில், முருகன் பாடல், நாட்டுப்புற பாடல், தமிழக வெற்றிக் கழக பாடல் ஆகியவை பாடப்பட்டன. விஜயை வாழ்த்தி ஒரு பாடலை பாடகர் வேல்முருகன் பாடினார். அவர் பாடி முடித்ததும் மேடை ஏறிய விஜய், அவருக்கு சால்வை அணிவித்து பாராட்டினார். அப்போது, பாடகர் வேல்முருகன், விஜய்யுக்கு அறுபடை வீடு முருகனின் படத்தை நினைவு பரிசாக வழங்கினார்.




விழாவில், மருதமலை மாமணியே முருகையா என்ற முருகன் பாடலை அவமதித்து இழிவுபடுத்திப் பாடிய பாடகர் வேல்முருகன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நெல்லை மாநகரக் காவல்துறையில் வழக்கறிஞர் குற்றாலநாதன் புகார் அளித்து இருந்தார். முருக பக்திப் பாடலை அரசியல் ரீதியாகத் திரித்துப் பாடி முருக பக்தர்கள் மனம் புண்படும்படி நடந்துகொண்ட பாடகர் வேல்முருகன் மற்றும் அவருக்குத் தூண்டுதலாக இருந்த தவெக தலைவர் விஜய், தவெக பொதுச்செயலாளர் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை விடுத்து புகார் அளிக்கப்பட்டு இருந்தது. இதனால், வேல்முருகன் உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுப்படுமா? என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் பாடகர் வேல்முருகன் இந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வேல்முருகன் கூறுகையில், நான் யதார்த்தமாகவே இந்தப் பாடலைப் பாடினேன்.. யாருடைய மனதையும் புண்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. இந்தப் பாடலைப் பாடியதற்கும், தவெக தலைவர் விஜய்க்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. என் பாடலால் யாருடைய மனதாவது புண்பட்டிருந்தால் அதற்கு நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். முருகனை அவமதிப்பது என்பது என்னை நானே கத்தியால் குத்திக் கொள்வதற்கு சமம்" என்று கூறியுள்ளார்.

## தூய்மைக்காவலர்களுக்கான மதிப்பூதியம் ரூ. 6 ஆயிரமாக உயர்வு - தமிழக அரசு அரசாணை வெளியீடு



**சென்னை,பிப்.5:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மையாக வைத்திருக்கும் வகையில் தூய்மைக்காவலர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் வீடுதோறும் திடக்கழிவுகளை சேகரித்து தரம் பிரித்து வருகின்றனர்.

கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் தூய்மைக்காவலர்களுக்கு மாதம் ரூ. 5 ஆயிரம் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த மதிப்பூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்று தூய்மைக்காவலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணியாற்றும் தூய்மைக்காவலர்களுக்கான மதிப்பூதியத்தை ரூ. 5 ஆயிரத்தில் இருந்து ரூ. 6 ஆயிரமாக உயர்த்தி தமிழக அரசு இன்று அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்காக ரூ. 417 கோடி கூடுதல் நிதியை ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

## தங்க நகைகள் வாங்குபவர்களை அதிர்ச்சியடைய வைத்த விலை

**சென்னை,பிப்.5:**



தங்கத்தின் விலை தொடர்ந்து ஏற்றமும், இறக்கமுமாக இருந்து வருகிறது. கடந்த 29-ந் தேதி ஒரு கிராம் தங்கம் ரூ.16,800 ஆக அதிகரித்திருந்தது. அதன்பின் விலை இறங்குவதும், ஏறுவதுமாக இருந்தது. சென்னையில் நேற்று முன்தினம் ஒரு கிராம் தங்கம் ரூ.13 ஆயிரத்து 950-க்கு விற்றது.

கடந்த ஓரிரு நாட்களாக விலை குறைந்திருந்த நிலையில், தங்கத்தின் விலை நேற்று மீண்டும் உயர்ந்தது. ஒரு கிராமுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.14 ஆயிரத்து 270-க்கு விற்றது. பவுனுக்கு ரூ.2 ஆயிரத்து 560 அதிகரித்தது. ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 11 ஆயிரத்து 600-ல் இருந்து, ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 160 ஆக உயர்ந்தது.

இந்த நிலையில் சென்னையில், தங்கம் விலை பவுனுக்கு ரூ.5,040 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1.19,200க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.630 உயர்ந்து ரூ.14,900க்கு விற்பனை செய்யப்படுகிறது.

### வெள்ளி விலை கிராமுக்கு ரூ.20 உயர்வு

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.320க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் ஒரு கிலோ வெள்ளி விலை ரூ.20,000 உயர்ந்து ரூ.3,20,000க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## மூத்த கல்வியாளர் எஸ்.எஸ்.ராஜகோபாலன் மறைவு: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

**சென்னை,பிப்.5:**



தமிழகத்தின் மூத்த கல்வியாளர்களுள் ஒருவரான முனைவர் எஸ்.எஸ். ராஜகோபாலன் வயதுமூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 95.

அவரது மறைவுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள இரங்கல் குறிப்பில், “மூத்த கல்வியாளர் எஸ்.எஸ். இராஜகோபாலன் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

ஆசிரியராகத் தமது கல்விப் பணியைத் தொடங்கிய அவர் தமிழ்நாடு அரசு முன்னெடுத்த சமச்சீர்க் கல்விக் குழுவின் உறுப்பினராக இருந்து தமிழ்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியிலும், மாணவர் நலனிலும் மிகுந்த அக்கறை காட்டியவர். அன்னாரது மறைவு கல்வித்துறைக்குப் பேரிழப்பாகும்.

அவருக்கு என் அஞ்சலியினைத் செலுத்துவதுடன், அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

‘மருத்துவ ஆய்வுக்காக உடல்’ - சென்னை கோடம்பாக்கம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு (பிப்.3) 11.54 மணிக்கு எஸ்.எஸ். ராஜகோபாலன் காலமானார்.

அவரது உடல் மருத்துவ ஆய்வுக்கு சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் இன்று ஒப்படைக்கப்படுவதாகத் தகவல்.

## மக்கள் விரோதிகளின் கடைசி ஆயுதம் ‘தேசப்பற்று’- பா.ஜ.க.வுக்கு திவ்யா சத்யராஜ் கண்டனம்

**சென்னை,பிப்.5:**



தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் திவ்யா சத்யராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மக்கள் விரோதிகளின் கடைசி ஆயுதம் “தேசப்பற்று”. பலநூறு ஆண்டுகள் கல்வி, வேலைவாய்ப்பு முதல் சமூக, சமுதாய கட்டமைப்பில் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு சனாதான கும்பல் வர்ணாசிரமம் முதல் குல கல்வி வரை எம் அப்பாவி மக்களை உண்டு கொழுத்து கிடந்தார்கள்.

அவர்களுக்கு சுயமரியாதை, சமூக நீதி விழிப்புணர்வு ஏற்பட்டதும் மதம் மற்றும் தேசப்பற்று என்று காரணம் காட்டி தங்கள் இடத்தை மீண்டும் தக்கவைத்து கொள்ள தவிக்கிறார்கள். எந்த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கிறார்கள். அதைத்தான் இப்போது பா.ஜ.க. செய்கிறது.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

## சந்திர பிரபை வாகனம் நாச்சியார் திருக்கோலம்



கூரம் ஸ்ரீ கூரத்தல்வான் திருவிழா நாள் 7 சந்திர பிரபை வாகனம் நாச்சியார் திருக்கோலம் புறப்பாடு.

## உயிருக்கு போராடிய சிறுமியை காப்பாற்றிய ஸ்ருதி ஹாசன்



### நெகிழவைக்கும் சம்பவம்

அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சிறுமியின் உயிரைக் காப்பாற்ற நடிகை ஸ்ருதி ஹாசன் உதவி செய்துள்ளார்.

ஆழ்வி என்ற சிறுமி MSMD எனப்படும் மிகவும் அரிய வகை மரபணு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நோயைக் குணப்படுத்த சிறுமிக்கு உடனடியாக எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால், அதற்குப் பெரும் தொகை தேவைப்பட்டது.

சிறுமியின் நிலையை அறிந்த ஸ்ருதி ஹாசன், உடனடியாக சிகிச்சைக்கான முழு நிதி உதவியையும் வழங்கி, சிறுமிக்கு சிறந்த சிகிச்சை கிடைக்கவும் உதவியுள்ளார்.

இதனால் அந்தச் சிறுமிக்குத் தகுந்த நேரத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. தற்போது அந்தச் சிறுமி முற்றிலும் குணமடைந்துள்ளார்.

சிறுமியுடன் அவரது பெற்றோர் ஸ்ருதி ஹாசனை நேரில் சென்று சந்தித்து நன்றி தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான வீடியோ வைரலாகி ஸ்ருதி ஹாசனுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

"எங்கள் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியது ஸ்ருதி ஹாசன் அவர்கள்தான். அவர் செய்த இந்த உதவியை எங்களால் ஒருபோதும் மறக்க முடியாது" என்று சிறுமியின் பெற்றோர் சமூக வலைதளங்களில் உருக்கமாகப் பதிவிட்டுள்ளனர்.

## திராவிட வெற்றிக்கழகம் தி.மு.க. கூட்டணியில் சேருகிறது

### 28-ந்தேதி நடக்கும் பொதுக்குழுவில் அறிவிக்க முடிவு

**சென்னை, பிப்.05:**

வருகிற 20-ந்தேதி நீலாங்கரையில் கட்சியின் தலைமை அலுவலகம் அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது.

வருகிற 28-ந்தேதி நடைபெறும் பொதுக்குழுவில் கூட்டணி முடிவை அறிவிக்க உள்ளார்.

ம.தி.மு.க.வில் இருந்து விலகிய மல்லை சத்யா திராவிட வெற்றி கழகம் என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கினார். தற்போது மாவட்டம் வாரியாக கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து வருகிறார். சட்டசபை தேர்தலை எதிர் கொள்ளும் வகையில் கட்சிக் கொடியையும் அறிமுகம் செய்தார்.

இந்த நிலையில் கட்சிக்கு புதிதாக அலுவலகம் கட்ட முடிவு செய்யப்பட்டு வருகிற 20-ந்தேதி நீலாங்கரையில் கட்சியின் தலைமை அலுவலகம் அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது. கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருந்து வரும் மல்லை சத்யா தி.மு.க. கூட்டணியில் சேர்வதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.



தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. இருந்தாலும் கூட அதில் சேர்ந்து களப்பணி ஆற்றவே அவர் விரும்புவதாக தெரிகிறது. வருகிற 28-ந்தேதி நடைபெறும் பொதுக்குழுவில் கூட்டணி முடிவை அறிவிக்க உள்ளார். எழும்பூரில் நடைபெறும் இந்த கூட்டத்தில் திராவிட வெற்றிக்கழகம் தி.மு.க.வுடன் இணைந்து தேர்தலை சந்திப்பதற்கான முடிவை அறிவிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

# அடுத்த சிம்பொனியை எழுதி முடித்த இளையராஜா!

**சென்னை, பிப்.05:**


இசைஞானி இளையராஜா தனது நீண்ட இசைப்பயணத்தில் சுமார் ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் இசையமைத்து சாதனை படைத்துள்ளார்.

மேற்கத்திய இசை மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவரான இளையராஜா மொசார்ட் உள்ளிட்ட மேற்கத்திய இசை ஜாம்பவான்களின் சிம்பொனி இசைக் கூறுகளை தனது பாடல்களில் பயன்படுத்தி பாமர மக்களும் அவற்றை ரசிக்கும் வகையில் மெட்டுகளை அமைத்தார்.

அவரது இசையால் பல திரைப்படங்கள் வெற்றிப் படங்களாக மாறியுள்ளன. அவரது பாடல்கள் அனைத்தும் இன்றைய தலைமுறையையும் கவரும் வகையில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு லண்டனில் 'வேலியண்ட்' (Valiant) என்ற தனது சிம்பொனியை இளையராஜா அரங்கேற்றம் செய்தார்.

'சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி



இளையராஜா பொன்விழா ஆண்டு 50' என்ற தலைப்பில் தமிழக அரசு அவருக்கு பாராட்டு விழா நடத்தியது.

இதற்கிடையே தனது அடுத்த சிம்பொனியை எழுதி வருவதாக கடந்த ஆண்டு தீபாவளி வாழ்த்துடன் இளையராஜா வீடியோ வெளியிட்டு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அடுத்த சிம்பொனியை எழுதி முடித்துவிட்டதாக இளையராஜா அறிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில், பிப்.3, 2026 உடன் புதிய ஸ்டுடியோவிற்கு வந்து, ஐந்தாண்டுகள் நிறைவடையவிருக்கிறது. என்னுடைய இரண்டாவது சிம்பொனியையும் கிட்டதட்ட எழுதி முடித்துவிட்டேன் எனக் கூறியுள்ளார்.

ஒரு கதை அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு நிகழ்ச்சியை இசை வடிவத்தில் நான்கு பகுதிகளாக சொல்வதற்கு பெயர்தான் சிம்பொனி. சிம்பொனி என்பது ஒரு ஆர்கஸ்ட்ரா வகை ஆகும்.

## சமபந்தி விருந்தில் நரிக்குறவர் சிறுவர்கள் விரட்டியடிப்பு: இதுதான் தி.மு.க.வின் சமூகநீதியா? - அன்புமணி

**சென்னை, பிப்.05:**

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாளையொட்டி திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் நேற்று நடைபெற்ற சமபந்தி விருந்தில் பங்கேற்க வந்த நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த 5 சிறுவர்கள் அதிகாரிகளால் விரட்டியடிக்கப்பட்டதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. சமூகநீதி பேசும் தி.மு.க. அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விருந்தில் கூட தீண்டாமையை கடைபிடித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

நெல்லையப்பர் கோவிலில் நடந்த விருந்தில் சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, நெல்லை மாநகர மேயர் இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிருந்த நிலையில், பசியுடன் அங்கு உணவருந்த வந்த சிறுவர்களை அதிகாரி ஒருவர் மிரட்டி, விரட்டியடிப்பதும், அதன்பின் அந்த சிறுவர்களை இன்னொருவர் அருகில் உள்ள



உணவகத்துக்கு அழைத்துச் சென்று உணவு வாங்கித் தருவதும் சமூக வலைத்தளங்களில் காணொலியாக பரவி வருகின்றன.

சமூக ஏற்றத்தாழ்வுகளை களைந்து சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் முக்கிய நாள்களில் ஆலயங்களில் சமபந்தி விருந்துகள் நடத்தப்படுகின்றன. ஆனால், சமபந்தி விருந்துகளிலேயே சமத்துவம் மறுக்கப்பட்டு தீண்டாமை தலைவிரித்தாடுகிறது என்றால் தி.மு.க. ஆட்சியில் சமூகநீதி எந்த அளவுக்கு சீரழிக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

தி.மு.க. ஆட்சியில் தீண்டாமை தலைவிரித்தாடுவது இது முதல்முறையல்ல. 2021-ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி மாமல்லபுரம் பூஞ்சேரியில் உள்ள ஸ்ரீதலசயன பெருமாள் கோவிலில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த அஸ்வினி என்ற பெண் உள்ளிட்டவர்கள் உணவு சாப்பிடச் சென்றபோது விரட்டியடிக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த அநீதிக்கு எதிராக அஸ்வினி வினா எழுப்பியது வைரலான நிலையில், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அந்த கோவிலுக்கு சென்று அஸ்வினியுடன் உணவருந்தினார்; பின்னர் அஸ்வினியின் வீட்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மன்னிப்பு கேட்டு சமாளித்தார்.

ஆனால், அதன் பின் நான்கரை ஆண்டுகள் ஆகும் நிலையில் தி.மு.க. ஆட்சியில் நரிக்குறவ மக்களுக்கு இன்னும் சமூகநீதியும், சமத்துவமும் கிடைக்கவில்லை என்பதையே நெல்லையப்பர் கோவில் நிகழ்வு காட்டுகிறது. இதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கைஎடுக்கப்படுவதுடன், இதற்காக நரிக்குறவ மக்களிடம் முதலமைச்சர் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஓடும் பஸ்சில் டிரைவருக்கு திடீர் நெஞ்சு வலி - சாமர்த்தியமாக பஸ்சை நிறுத்தியதால் உயிர் தப்பிய 36 பயணிகள்

**அந்தியூர், பிப்.5:**

ஈரோடு மாவட்டம் அந்தியூர் பஸ் நிலையத்திலிருந்து இன்று காலை 9.10 மணியளவில் மேட்டூர் நோக்கி அரசு பஸ் கிளம்பியது. பஸ்சை அந்தியூர் புதுப்பாளையம் பகுதி சேர்ந்த ராஜா என்பவர் ஓட்டினார். சக்திவேல் நடத்துநராக இருந்தார். பஸ் 35 பயணிகளுடன் கிளம்பியது.

இந்நிலையில் அண்ணா மடுவு பகுதியில் பஸ் வந்து கொண்டிருந்தது. அப்போது டிரைவர் ராஜாவுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனடியாக இதற்கு மேல் பஸ்சை இயக்க முடியாது என உணர்ந்த ராஜா பஸ்சை அந்த பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை அருகே நிறுத்தினார். அப்போது அவருக்கு நெஞ்சு வலி அதிகமானதால் அலறினார்.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த பயணிகள் உடனடியாக




அந்த தனியார் மருத்துவமனையில் ராஜாவை சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நல்ல வேலையாக நெஞ்சு வலி ஏற்பட்டவுடன் ராஜா பஸ்சை சாமர்த்தியமாக ஓரமாக நிறுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால் பஸ்ஸில் இருந்த 35 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இதுகுறித்து அந்தியூர் பணிமனை மேலாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்து வேறு பஸ் வரவழைக்க பயணிகள் பத்திரமாக ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## புதுச்சேரிக்கு பிரதமர் மோடி வருகை - முதலமைச்சர் ரங்கசாமியுடன் பா.ஜ.க.வினர் ஆலோசனை

**புதுச்சேரி, பிப்.05:**

பிரதமர் மோடி வருகிற 16-ந்தேதி அரசு முறை பயணமாக புதுச்சேரிக்கு வருவது உறுதியாகி உள்ளது. டெல்லியில் இருந்த வருகிற 15-ந் தேதி தமிழகத்திற்கு வரும் பிரதமர் மறுநாள் 16-ந்தேதி விமானம் மூலம் லாஸ்பேட்டை விமான நிலையத்திற்கு வருகிறார்.

பின்னர் விமான நிலையம் அருகே நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று மத்திய, மாநில அரசுகள் சார்பில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். விழாவில் முதலமைச்சர் ரங்கசாமி மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்கின்றனர்.

பிரதமர் மோடி பங்கேற்கும் அரசு விழா ஏற்பாடு தொடர்பாக சபாநாயகர் ஏம்பலம் செல்வம்,



உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பா.ஜ.க. மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் ஆகியோர் முதலமைச்சர் ரங்கசாமியை அவரது வீட்டில் சந்தித்து பேசினர்.

2 மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் பிரதமரின் வருகையின்போது அறிவிக்கப்பட வேண்டிய முக்கிய திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

## 14வது சங்க அமைப்பு தினம் சிறப்பு கருத்தரங்கம்



**விருதுநகர், பிப்.05:**

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட அமைப்பு தின சிறப்பு கருத்தரங்கம் திருவில்லிபுத்தூரில் 3.2.26 அன்று மாலை நடைபெற்றது.மாவட்ட தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையேற்க மாவட்ட இணைச் செயலாளர் இராம சீனுவாசன் வரவேற்றார். மாவட்ட செயலாளர் சுப்புராஜ் துவக்கி வைத்தார்.மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். மாவட்ட நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் என 85 பேர் கலந்து கொண்டனர்.

## எச்.ராஜாவை மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரித்தார் எடப்பாடி பழனிசாமி



**சென்னை, பிப்.05:**

எச்.ராஜாவை சந்தித்து அரசியல் தலைவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர்.

பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் நலம் விசாரித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனியார் செய்தி நிறுவனத்தின் நிகழ்ச்சியில் பங்கேற்ற பாஜக தலைவர் எச்.ராஜாவுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. மேடையிலேயே அவர் மயங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அவரை அங்கிருந்தவர்கள் பாலாஜி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் எச்.ராஜா அனுமதிக்கப்பட்டார்.

அங்கு எச்.ராஜாவுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் அப்பல்லோ மருத்துவமனை சார்பில் நேற்று எச்.ராஜா உடல்நிலை குறித்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், எச்.ராஜாவுக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எச்.ராஜாவை சந்தித்து அரசியல் தலைவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர்.

அந்த வகையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாஜக மூத்த தலைவர் எச்.ராஜாவை பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், நடிகர் ரஜினிகாந்த் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாஜக மூத்த தலைவர் எச்.ராஜாவை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

## துணை வேந்தர்களை நியமிக்கும் சட்டத்துக்கு தடை நீங்கியது

### உச்ச நீதிமன்றம் அதிரடி

**சென்னை, பிப்.05:**

தமிழக பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்க அதிகாரம் வழங்கும் சட்டத்திற்கு, சென்னை உயர் நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத் தடையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.



இந்த விவகாரம் மாநில அரசின் உரிமை மற்றும் ஆளுநரின் அதிகாரம் ஆகியவற்றுக்கு இடையேயான நீண்ட காலப் போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகும். கடந்தாண்டு மே மாதம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், (லட்சுமி நாராயணன் அமர்வு அரசின் சட்டத்திற்கு தடை விதித்திருந்தனர்.

தமிழ்நாடு அரசு 2022-2024 காலகட்டத்தில் பல்வேறு பல்கலைக்கழக சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. அதில், துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் ஆளுநரிடம் இருந்து நீக்கப்பட்டு, மாநில அரசுக்கே வழங்கப்பட்டது.

ஆளுநர் தன்னிச்சையாக துணைவேந்தர்களை நியமிப்பதாக அரசு குற்றம்சாட்டியது. மாநில அரசின் கொள்கைகளுக்கு இணக்கமான மற்றும் கல்விசார் தகுதியுள்ளவர்களை நியமிக்க இந்த அதிகாரம் அவசியம் என அரசு வாதிட்டது.

கடந்த ஆண்டு இந்த சட்டத்திருத்தங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் விடுமுறை கால அமர்வு, இதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

பல்கலைக்கழக மானியக் குழு (UGC) விதிகளின்படி, துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநருக்குப் பங்கு இருக்க வேண்டும் என்றும், மாநில அரசின் சட்டம் UGC விதிகளுக்கு முரணாக இருப்பதாகவும் கூறி இந்தத் தடை விதிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் தடையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் பல்வேறு காரணங்களுக்காக உயர் நீதிமன்றத் தடையை நீக்கியது:

பல பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், நிர்வாகச் சிக்கல்களைத் தவிர்க்க இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவது அவசியம் எனக் கருதப்பட்டது.

தமிழக பல்கலைக் கழகங்களுக்கான துணை வேந்தர்களை முதல்வரே நியமிக்கும் சட்டத்துக்கு எதிரான உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தது உச்சநீதிமன்றம் இதனால் முதல்வரே துணை வேந்தர்களை நியமிக்கும் சட்டத்துக்கு தடை நீங்கியது.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009



# கவிதை அரங்கம்!




பயிற்சியும் முயற்சியும்
சேர்ந்தால் தான் வெற்றி
பயிற்சி செய்து
முயற்சி செய்
வெற்றி உனதே

உன்னை வெல்லும் தகுதி
தோல்விக்கே இருக்கும்
போது தோல்வியை
வெல்லும் தகுதி உனக்கு
இல்லாமலா போய்விடும்

ஒரு சிக்கல்
உங்கள் சிறந்ததைச்
செய்வதற்கான
வாய்ப்பாகும்

கத்தி என்று தெரிந்தும்
கால்தடம் பதித்தவர்கள்
தான் இன்று காலத்தை
கை பிடியில் கசக்கி
வைத்திருக்கிறார்கள்

# வாழ்க்கை தத்துவம்...



சோகத்தை சந்தோஷமாக
மாற்றும் வரம்
நம் மனதில் தான் பிறக்கிறது

நாளைய கவலைக்கு
இன்றைய சிரிப்பை
தியாகம் செய்யாதே

சோர்வுக்கு அடியில் தான்
உயர்ந்த நம்பிக்கையின்
விதை தூங்குகிறது

முடிந்தால் வெல்லலாம்
முடியாவிட்டாலும்
முயற்சித்தவன்
வலிமையைக் காண்பித்துவிட்டான்

# தமிழ் உயிர் மூச்சு !

அன்றைய தினம் தமிழாசிரியர் சீனி வாசன் என்கிற சீனி வாத்தியார் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு பிரிவு உபசார விழா ஏற்பாடு ஆகியிருந்தது. மேடையில் நடு நாயகனாக சீனி வாத்தியார் அமர வைக்கப்பட்டார். வலது புறம் தலைமை யாசிரியர் சில ஆசிரியர்கள், மற்றும் இடது புறம் சில ஆசிரியர்களும் அமர்ந் திருந்தனர்.

அனைவரும் பேப்பர் தட்டில் தரப்பட்ட ஸ்வீட், கார வகைகளை சாப்பிட்டனர் .

பிறகு, ஒவ்வொருவராக எழுந்து நின்று சீனி வாத்தியாரைப் பற்றி பெருமையா கப் பேசினார்கள். தமிழ் மொழிக்கெ ன்றே அவதாரம் எடுத்தவர், இலக்கணப் பிழையின்றி பாடம் சொல்லிக் கொடு ப்பவர், சரளமாக கவிதைகளை வடிப்பதில் வல்லவர், அவரால் தமிழ் பாடத்தில் மாணவர்களை நிறைய மதிப்பெண் எடுக்க வைத்தது ஒரு பெரிய சாதிப்பு, காலியான அவர் இடம் யாராலும் நிரப்ப முடியாது என்றெல் லாம் வாத்தியாருக்கு புகழாரம் சூட்டினர். கேட்ட சீனி வாத்தியாருக்கு நெகிழ்ச்சியில் கண்கள் பனித்தன.

கடைசியில் சீனி வாத்தியார் எழுந்து நின்று பேசத் தொடங்கினார். பின் ட்ராப் சைலன்ஸ் ! பேசிக் கொண்டே வந்தவர், கடைசியில் " ஆகவே மாணவ மணிகளே ! நான் இல்லாமல் போனா லும் வேறு தமிழாசிரியர் வருவார். அவரும் நன்றாகப் பாடம் நடத்துபவராக இருப்பார். அவருக்கும் நீங்கள் முழு ஒத்துழைப்பைத் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நம் தாய் மொழி. உங்கள் தாயை நேசிப்பது போல் தமிழையும் விடாமல் நேசியு ங்கள். ஏனென்றால் தமிழ் உங்கள் உயிர் மூச்சு ! “என்று பேசி முடித்து இருகரம் குவித்து வணங்கினார். கைத்தட்டல் விண்ணைப் பிளந்தது !

மேடையில் இருந்த தலைமையாசிரியர், மற்றும் சக ஆசிரியர்களும் சீனி வாத்தி யார் கை பிடித்துக் குலுக்கினார்கள். சிலர் அவரை தங்களோடு சேர்த்து அணைத்துக் கொண்டனர். அந்த அணைப்பில் நட்பின் வலிமையைப் புரிந்து கொண்ட சீனி வாத்தியாரின் கண்கள் கலங்கி விட்டன. முன்னால் குழுமியிருந்த மாணவர்களைப் பார்த்து கையசைத்தார். மாணவர்களும் மரியா தை நிமித்தம் எழுந்து நின்று பதிலுக்கு கையசைத்தார்கள்.

வெளியே வந்ததும் சிறிது நேரம் நின்ற படியே பள்ளிக்கூடத்தை கண்ணாற பார்த்தார். கண்களைத் துடைத்துக் கொண்டார். நாளையிலேர்ந்து பள்ளிக் கும் தனக்கும் இனி சம்பந்தமில்லை என்கிறநினைப்பு அவர் நெஞ்சைச் சுட்டது.

வாடகைக் காரில் அவரைக் கொண்டு போய் வீட்டில் சேர்த்தார்கள் சில ஆசிரியர்கள். அனைவருக்கும் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது. கொஞ்ச நேரம் சீனி வாத்தியா ரிடம் பேசிக் கொண்டிருந்தவர்கள் கடைசியில் ஒவ்வொருவராக அவர் கை பற்றி குலுக்கி விட்டுச் சென்றனர்.

எல்லோரும் போன பிறகு, ஈ.ஸி. சேரில் சாய்ந்து கொண்டிருந்த வாத்தியார் அருகில் வந்து நின்றான் அவரின் ஒரே மகன் சீதாராமன். நீண்ட நாள் கழித்துப் பிறந்தவன். கூடவே அம்மா பார்வதியும் அருகில் சென்று நின்று கொண்டாள். கணவரை கண் சிமிட்டாமல் பார்த்தாள். முப்பத்தாறு வருடங்கள் உழைப்பின் அடையாளமாக உடல் சோர்ந்து போய் இருப்பது தெரிந்தது. பரிவும் பச்சா த்தாபமும் ஏற்பட்டது.

" என்னப்பா ! செண்ட் ஆஃப் பார்ட்டி படு அமர்க்களம் போல இருக்கு ?பரவா யில்லை,நல்ல மரியாதையோடு வீட்டில் உங்களைக் கொண்டு வந்து விட்டார் கள். “ என்றவன், “ ஏம்பா, பார்ட்டிக்கு அம்மாவையும் அழைத்திருக்கலாமே ? விழாவை ரசித்திருப்பாங்க!"

" கூப்பிட்டேன், உங்கம்மாதான் ‘ வெட்க மாயிருக்கு, வரமாட்டேன்’னு சொல் லிட்டா...அது சரி, உன் நேர் முகத்தேர்வு என்னாச்சு? செலக்ட் ஆனையா,இல்லை யா ?" கேள்வி கேட்ட மகனைப் பார்த்து எதிர் கேள்வி கேட்டார் சீனி வாத்தியார்.

" ஆயிட்டேன் அப்பா ! இதோ அப்பா யிண்ட்மெண்ட் ஆர்டர்!" என கையில் தயாராக வைத்திருந்த ஆர்டரை நீட்டினான் சீதாராமன்.

ஆர்டரை வாங்கிப் பார்த்து முகம் சுருக்கியவர். " என்னடா இது ! தமிழாசிரியர் போஸ்ட்டுக்கு ஆர்டர் கொடுத்திருக்காங்க?" என கேட்டார் சீனி வாத்தியார்.

" அப்பா, ஆங்கிலம், கணக்கு, தமிழ்னு மூணு வாத்தியார் போஸ்டுக்கு நேர் முகத் தேர்வு வெச்சாங்க. நான் தமிழ் வாத்தியாரா செலக்ட் ஆயிட்டேன். ஒரு தமிழ் ஆசிரியர் மகன் தமிழ் ஆசிரியரா கக்கூடாதா ? உங்களுக்குத்தானப்பா பெருமை !"

‘ ம்..பெருமைதான். ஆனால் நம்மப் பரம் பரையே தமிழ் வாத்தியார் வேலை பார் த்தாச்சு. நீயாவது ஆங்கிலத்திலோ அல்லது கணக்குலயோ வாத்தியார் வேலைக்குப் போகலாமேன்னு ஒரு ஆதங்கம் அவ்வளவுதான் !’ மனதில் நினைத்துக் கொண்டார் பள்ளி பிரிவு உபசார விழாவில் ’ தமிழை நேசியு ங்கள்; தமிழ் உங்கள் மூச்சு !’ என்று புகழ் பாடிய சீனி வாத்தியார்.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*இப்ப யாராவது காசு இல்லாம சாப்பிட வந்தா தேவலை...!*

*ஏன் முதலாளி, அப்படிச் சொல்றீங்க?*

*தொடர் பவர்கட் காரணமா மாவு ஆட்ட ஆள் வேண்டியிருக்கே...!*



# தினம் ஒரு சமையல்



## ஐவ்வரிசி வேர்க்கடலை கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:**

* முட்டை - 2
* சிறிய வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது)
* பச்சை மிளகாய் - 1 (பொடியாக நறுக்கியது)

**கார மசாலாவிற்கு...**

* எண்ணெய் - 3 டீஸ்பூன்
* பூண்டு - 2 பல்
* பச்சை மிளகாய் - 2
* பெரிய வெங்காயம் - 1
* மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
* மிளகாய் தூள் - 1 டீஸ்பூன்
* மல்லித் தூள் - 1 டீஸ்பூன்
* மிளகுத் தூள் - 1/2 டீஸ்பூன்
* சீரகத் தூள் - 1 டீஸ்பூன்
* உப்பு - சுவைக்கேற்ப
* கொத்தமல்லி - 1 கையளவு

**செய்முறை:**



* முதலில் ஒரு கிண்ணத்தில் 2 முட்டைகளை உடைத்து ஊற்றி, அதில் பொடியாக நறுக்கிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயை சேர்த்து நன்கு அடித்துக் கொள்ள வேண்டும்.
* பின்னர் ஒரு சிறிய பேனை அடுப்பில் வைத்து, அதில் 3 டீஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், பொடியாக நறுக்கிய 2 பல் பூண்டு மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.
* அதன் பின் அதில் பொடியாக நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து கண்ணாடி பதத்திற்கு வதக்க வேண்டும்.
* அடுத்து அதில் மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித் தூள், மிளகுத் தூள், சீரகத் தூள் மற்றும் சுவைக்கேற்ப உப்பு சேர்த்து குறைவான தீயில் வைத்து பச்சை வாசனை போக வதக்க வேண்டும்.
* பிறகு மசாலாவை தவாவில் அப்படியே பரப்பி விட்டு, அதன் மேல் அடித்து வைத்துள்ள முட்டையை ஊற்றி பரப்பி, மூடி வைத்து 5 நிமிடம் குறைவான தீயில் வைத்து, வேக வைக்க வேண்டும்.
* 5 நிமிடம் கழித்து, மூடியைத் திறந்து, முட்டையைத் திருப்பிப் போட்டு எடுத்தால், சுவையான கார முட்டை ஆம்லெட் தயார்.

# பொன்னாங்கண்ணி பயன்கள்



தலை முடி பிரச்சனையா?

பொன்னாங்கண்ணிக் கீரையை உணவில் சேர்த்து கொள்ளுங்கள் அல்லது எண்ணெயில் இட்டு நன்கு காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு தலைக்குத் தடவு வாருங்கள், தலைமுடி நன்கு செழுமையாக வளரும்.

பார்வையை குறைபாடா

பொன்னாங்கண்ணியை கீரையை தொடர்ந்து 27 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பகலிலும் நிலவை பார்க்கலாம் என்பது பழமொழி. அந்த அளவிற்கு கண் பார்வை மிக துல்லியமாக தெரியம் என்கிறது சித்த மருத்துவம் உப்பு சேர்க்காமல் வேக வைத்து இளஞ்சூட்டோடு வெண்ணெய் சேர்த்து சாப்பிட்டு வர கண் பார்வை தெளிவு பெறும்.

பொன்னாங்கண்ணிச் சாறு, நல்லெண்ணெய், நெல்லிக்காய் சாறு பசுவின் பால், கரிசலாங்கண்ணிச் சாறு இவை சம அளவு எடுத்து இதனோடு சிறிதளவு அதிமதுரத்தை பாலில் அரைத்து சேர்த்து காய்ச்சி மெழுகு பதத்தில் வந்ததும் வடிகட்டி தலைக்கு தேய்த்து தலை முழுகி வர 96 வகையான கண் நோய்களும் தொலைந்து போகும்.

உடல் சூடா

அனைத்து விதமான உடல் வலி, உடல் சூடு, உடல் வலி, உடல் எரிச்சல், போன்றவற்றிற்கு சித்தர்கள் அருளிய மாமருந்து. பொன்னாங்கண்ணி இலைச்சாறு நல்லெண்ணெய் தலா ஒரு லிட்டர் கலந்து அத்துடன் அதிமதுரம், கோசுடம், செங்கழு நீர்க்கிழங்கு, கருஞ்சீரகம் வகைக்கு 20 கிராம் எடுத்து பாலில் அரைத்துப் போட்டு சிறு தீயில் பதமாகக் காய்ச்சி வடிகட்டி 4 நாளுக்கு ஒரு முறை தலைக்குக் குளித்து வர உட்காய்ச்சல், உடல்சூடு, கைகால் உடல் எரிச்சல், மண்டைக் கொதிப்பு, கண் எரிச்சல், உடம்புவலி, வயிற்றுவலி குணமாகும்.

# D55 படத்தில் தனுஷுடன் முதல் முறையாக இணைந்து சூப்பர்ஸ்டார். அதிகாரப்பூர்வமான அறிவிப்பு



அமரன் படத்தின் வெற்றியை தொடர்ந்து இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் D55.

கடந்த சில நாட்களாக படத்தில் இணைந்துள்ள பிரபலங்கள் குறித்து தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகிறது. முதலில் இப்படத்தின் இசையமைப்பாளர் சாய் அப்யங்கர் என்கிற அறிவிப்பு வந்ததை தொடர்ந்து, இப்படத்தில் ஸ்ரீலீலா மற்றும் சாய் பல்லவி ஆகிய இருவரும் கமிட்டாகியுள்ளனர் என அறிவித்தனர்.

‘வித் லவ்’ படம் பார்த்துவிட்டு ரஜினிகாந்த் சொன்ன விமர்சனம்.. படம் எப்படி வந்துள்ளது தெரியுமா ‘வித் லவ்’ படம் பார்த்துவிட்டு ரஜினிகாந்த் சொன்ன விமர்சனம்.. படம் எப்படி வந்துள்ளது தெரியுமா

இந்நிலையில், D55 படத்தில் மலையாள சூப்பர்ஸ்டார் நடிகர் மம்மூட்டி இணைந்துள்ளதாக அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்மூலம் முதல்முறையாக தனுஷுடன் மம்மூட்டி கைகோர்த்துள்ளார்.

மேலும், 7 ஆண்டுகளுக்கு பின் மம்மூட்டி தமிழில் நடிக்கிறார். இவர் நடிப்பில் கடைசியாக 2019ஆம் ஆண்டு பேரன்பு படம் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



நடிகை ருக்மிணி வசந்தின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது வெளியா கியுள்ளது. இதோ நீங்களே பாருங்க:

சினிமா

# பேருந்தில் என்னை ஒருவன் தவறாக தொட்டான்.. 11வது படிக்கும்போது நடந்த சம்பவத்தை பகிர்ந்த நடிகை ரேவதி

1983ஆம் ஆண்டு தமிழ் சினிமாவில் வெளிவந்த மண் வாசனை படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானவர் ரேவதி. இவர் ஒரு படத்தில் நடிக்கிறார் என்றால் கண்டிப்பாக அப்படம் நல்ல படமாக இருக்கும் என்கிற நம்பிக்கை ரசிகர்கள் மத்தியில் உள்ளது.

நடிகையாக மட்டுமின்றி இயக்குநராக செயல்பட்டு வருகிறார். இவர் இயக்கத்தில் கடந்த ஆண்டு The Good Wife எனும் வெப் தொடர் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நடிகை ரேவதி என்பதும் தனது மனதில் பட்டதை வெளிப்படையாக பேசும் நபர் ஆவார். அதே போல் தைரியமான, அழுத்தமான கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில், 11வது வகுப்பு படிக்கும்போது பேருந்தில் தனக்கு ஏற்பட்ட சம்பவத்தை பேட்டி ஒன்றில் வெளிப்படையாக கூறியுள்ளார். அவர் கூறியதாவது, “நான் 11வது படித்துக்கொண்டு இருக்கும் போது,



பேருந்தில் என்னை ஒருவன் தவறாக தொட்டான். நான் யாருக்கும் பயப்படவில்லை. அவனை அந்த இடத்திலேயே பளாரென கன்னத்தில் அடித்தேன். அப்போது அங்கிருந்த அனைவரும் எனக்கு துணையாக நின்றார்கள்.

அந்த தைரியத்தை எனக்கு கொடுத்தது என் அம்மா. யாராவது தவறாக நடந்து கொண்டால், பயப்படாமல் தைரியமாக அடி என்றார். அதைத்தான் நான் அன்று செய்தேன். இதைபோல் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர்களின் பெற்றோர் பக்கபலமாக இருக்க வேண்டும்” என கூறியுள்ளார்.

பேப்பர்பாய்
சென்னை வியாழக்கிழமை 05.02.2026

# பூலோகம் தான் வைகுண்டம்

ஸ்ரீராமர் பூமியில் தோன்றிய காரணங்கள் நிறைவேறி விட்டன. ராமருடன் வந்த லக்ஷ்மணன் தன் இருப்பிடம் சேர்ந்துவிட்டான்.

சீதா தேவியாக பிறவி எடுத்த லக்ஷ்மி தேவியோ , ராமருக்கு முன்பாகவே வைகுண்டம் சென்று காத்திருக்கிறாள்.

ஆனால் ஸ்ரீ ராமரால் காலதேவன் கேட்டுக் கொண்டதன் படி அவ்வளவு சுலபமாக பூவுலகை விட்டு செல்ல முடியவில்லை. ராஜ்யத்தை தன் பிள்ளைகளுக்கும் மற்ற சகோதரர்களின் வாரிசுகளுக்கும் பிரித்து கொடுத்தாகிவிட்டது. பரதனும் சத்ருக்கனனும் ஸ்ரீராமருடன் புறப்பட தயாரானார்கள்.

ஆனாலும் ஸ்ரீ ராமரால் அவர் விருப்பப்படி தன் வாழ்வை துறக்க முடியவில்லை. என்ன காரணம்???

சாட்சாத் அந்த அனுமன் தான் முக்கிய காரணம். அனுமன் இரவும் பகலும் ராமருடைய அருகாமையிலேயே இருந்து அவர் பணிகளை செய்கிறான்; அவரை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டான்.

பகவான் ஸ்ரீ ராமர் இறுதியாக அனுமனுக்கு நிரந்தர பிரிவின் அவசியத்தை விளக்க எண்ணினார்.

ஒரு நாள் ராமர் அனுமன் பேசிக்கொண்டிருந்தார். அனுமன் அறியாதவாறு தன் விரலில் சூட்டியிருந்த மோதிரத்தை ஒரு பள்ளத்தில் விழ செய்தார் ராமர். அந்த மோதிரம் பள்ளத்தின் உள்ளே ஓடியது.

உடனே இராமன் அனுமனை நோக்கி. அனுமனே! அந்த மோதிரம் பள்ளத்தில் விழுந்து விட்டது. அந்த மோதிரத்தை எடுத்து வா என்று கூறினார்.

அனுமன் தன் உடலை மிகச்சிறிய பூச்சி வடிவாக்கிக் கொண்டு மோதிரம் விழுந்த பள்ளத்தில் நுழைந்தார்.

ஆனாலும் மோதிரமோ நழுவிக்கொண்டு பாதாளம் நோக்கி சென்று கொண்டிருந்தது. அனுமனும் விடாமல் மோதிரத்தை பின்தொடர்ந்தார்.

இறுதியில் அந்த மோதிரம் பாதாள லோகத்தின் வாயிலை அடைந்தது. பாதாள லோகத்தில் கதவு திறந்துகொள்ள மோதிரம் உள்ளே நழுவி விட்டது. பாதாள லோகத்தில் கதவும் மூடிக்கொண்டது.

மோதிரத்தை பின்தொடர்ந்த அனுமன் பாதாள லோகத்தில் வாசலில் நின்றான். அப்போது அங்கே பாதாள லோகத்தின் காவலரான காலதேவன் அனுமன் முன் வந்து என்ன தேடுகிறாய்? எனக் கேட்டான்.

அனுமனும் பகவான் ஸ்ரீராமரின் மோதிரம் உள்ளே சென்று விட்டது அதை எடுத்துச் செல்ல வந்தேன் என்றான்.

அப்படியா என்று புன்னகைத்தவாறு கேட்ட காலதேவன் பாதாள அறையின் கதவை திறந்து விட்டான். உள்ளே சென்று உன் மோதிரத்தை எடுத்துச்செல் என்று அனுமனிடம் கூறினான்.



அனுமனும் பாதாள அறைக்குள் நுழைந்தான் ஆனால் அவன் தேடி வந்த மோதிரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆம் அந்த அறையில் ஆயிரக்கணக்கான மோதிரங்கள் குவிந்து இருந்தன. அனைத்து மோதிரமும் ஒன்று போல் இருக்க அனுமன் குழம்பினான்.

காலதேவன் கூறினான். அனுமனே இவை அனைத்தும் காலச் சுழற்சியின் அடையாளங்கள். யுகங்கள் மீண்டும் மீண்டும் பிறக்கும்.

அப்போது பிரம்மா விஷ்ணு லக்ஷ்மி முதலான தெய்வங்கள் மீண்டும் மீண்டும் வரிசையாக அவதாரம் எடுப்பார்கள்.

அவர்கள் தாங்கள் எடுத்த பிறவியின் செயலை நிறைவேற்றுவார்கள் பின் மறைவார்கள். அவர்களை நாம் தடுக்கவோ அவர்களுடன் செல்லவோ முடியாது.

அனுமனே, ராமர் தன் மூல உரு எடுக்கும் நேரம் வந்துவிட்டது. அதை அணிந்து கொள்ள வேண்டும் என்று ராமர் தன் மோதிரத்தை தவற விட்டார். காலசுழற்சியின் விளக்கத்தை அறிந்து நீ உன் இருப்பிடம் செல்வாயாக என்று காலதேவன் அறிவுறுத்தினான்.

பிறப்பு இறப்பின் மகத்துவம் அறிந்த அனுமனும் மனம் தெளிந்த நிலையில் மீண்டும் ராமரை அடைந்தான்.

இப்போது பகவான் ஸ்ரீ ராமர் அனுமனிடம் விடை பெற எண்ணினார். ஆனாலும் தன் மூத்த மகன் போல் விளங்கிய அனுமனை எளிதில் உதற முடியவில்லை.

ஸ்ரீராமன் அனுமனை அழைத்தார். அனுமனை உனக்கு ஒரு உரிமை தருகிறேன். உனக்கு விருப்பமானால் நான் இப்பூமியிலிருந்து செல்லும்போது நீ என்னுடன் வரலாம் என்று கண்ணீர் மல்க கூறி அனுமனை கட்டித் தழுவிக் கொண்டார்.

அனுமன் உடல் சிலிர்த்தான். உள்ளம் நெகிழ்ந்தான், சற்று ஒரு கணம் யோசித்தான்.

பிரபு தாங்கள் என்னை உங்களுடன் அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தமைக்கு நன்றி. ஆனால் ஒரு விளக்கம் மட்டும் கூறுங்கள்.

ஸ்ரீவைகுண்டத்தில் நீங்கள் ராமனாக - என் பிரபுவாக இருப்பீர்களா ? இல்லை அவதார புருஷன் விஷ்ணுவாக இருப்பீர்களா ? என அனுமன் கேட்டான்.

ஒரு நிமிடம் திகைத்தார் ராமர்.

என்ன சந்தேகம் என் மகனே! வைகுண்டத்தில் நாம் பகவான் விஷ்ணுவாகவும், சீதை லட்சுமி தேவியாகவும், லட்சுமணன் ஆதிசேஷனாகவும், பரதன் சத்ருக்கனன், சங்கு சக்கரம் ஆகவும் அவதாரத்தில் இருப்போம் என்றார் பகவான் ராமர்.

அனுமனோ தயக்கமின்றி பிரபு....

எனக்கு ஸ்ரீராமன்போதும் உங்களை ராமனாகவும் அன்னையை சீதாபிராட்டியாகவும் , மற்றவர்களை இப்புவியில் எடுத்த அவதாரங்களாவே வணங்க விரும்புகிறேன்.

நான் பூமியில் இருந்து உங்கள் நாமத்தை சொல்லிக் கொண்டே இருப்பேன் உங்கள் நாமத்தை பிறர் சொல்வதை கேட்டபடியே இருப்பேன். எனக்கு அந்த புண்ணிய நிலையை என்றென்றும் நீங்கள் அருளினால் போதும் என்றான் அனுமன்.

ஸ்ரீ ராம சீதா ஜெயம் !

ஸ்ரீ ராம ஜெய ராம ஜெய ஜெய ராமா !

---

தினம் ஒரு தலைவர்கள்

# சுசேதா கிருபளானி வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு

ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை 'தணிகையன் துணை' என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருதேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.

திருப்பணிகள்

அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை பல்வேறு மடங்களுக்கும்,



ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன.

மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். 'கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது'. (ரெங்கையா முருகன் கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.

# கோல்ட்ரிஃப் இருமல் மருந்து சாப்பிட்டதால் 4 மாதங்களாக கோமாவில் இருந்த ம.பி. சிறுவன் உயிரிழப்பு



**பெதுல், பிப்.5:**

ம.பி.யில் நச்சுத்தன்மை கொண்ட கோல்ட்ரிஃப் இருமல் மருந்தை உட்கொண்டதால் கோமா நிலைக்குச் சென்ற 4 வயது சிறுவன் நான்கு மாதங்களுக்குப் பிறகு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் பெதுல் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், கடந்த 4 மாதங்களுக்கும் மேலாக கோமா நிலையில் நாக்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தான். இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அந்த சிறுவன் உயிரிழந்ததாக மருத்துவ அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இது குறித்து பெதுல் மாவட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் மனோஜ் ஹர்மேட் கூறுகையில், "நாக்பூரில் சிறுவனின் உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அறிக்கை வந்த பின்னரே மரணத்துக்கான காரணம் தெரிய வரும்" என்றார்.

கடந்த ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில், சிறுநீரக செயலிழப்பை ஏற்படுத்தும் நச்சுத்தன்மை கொண்ட கோல்ட்ரிஃப் இருமல் மருந்தை உட்கொண்ட 24-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர். தற்போது சின்வாரா எல்லைப் பகுதியில் உள்ள திகாபாரி கிராமத்தைச் சேர்ந்த ஹர்ஷூம் உயிரிழந்ததைத் தொடர்ந்து உயிரிழப்பு எண்ணிக்கை 25-ஆக அதிகரித்துள்ளது.

# வெளிநாடுகளில் இருந்து எவ்வளவு தங்கம் வரி இல்லாமல் கொண்டு வரலாம்? புதிய விதிகள் அமல்




**புதுடெல்லி, பிப்.5:**

வெளிநாடுகளில் இருந்து இந்தியா வருகை தரும் இந்திய குடிமக்கள் விமானங்களிலோ, கப்பல்களிலோ விலைமதிப்புமிக்க பொருட்களை எடுத்து வந்தால் அதற்கு சுங்க வரி செலுத்துவது கட்டாயம் ஆகும். எனினும், குறிப்பிட்ட அளவு மதிப்பு வரையிலான பொருட்களுக்கோ தங்க ஆபரணங்களுக்கோ வரி விதிக்கப்படாது. அதாவது தற்போது வரை ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள தங்க நகைகளை பயணிகள் தங்கள் உடைமைகளில் கொண்டு வரலாம். அதற்கு எந்த வரியும் கிடையாது. இந்த லக்கேஜ் விதிகளில் புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. மாற்றப்பட்ட இந்த புதிய விதி பிப்ரவரி 2 முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த புதிய விதிகளின்படி இந்தியாவில் வசிப்பவர்கள் அல்லது இந்திய சுற்றுலாப் பயணிகள் அல்லது சுற்றுலா விசா இன்றி பிற விசாவில் வரும் வெளிநாட்டவர்கள் ரூ.75 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை சுங்க கட்டணம் இன்றி எடுத்து வரலாம். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என்றால் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் வரை வரியின்றி எடுத்து வரலாம். உடைமை விதிகள் 2016ல் மத்திய நேரடி வரிகள் வாரியம் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இந்த புதிய திருத்தப்பட்ட விதிகள்தான் நேற்றுமுன்தினம் முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்திய குடிமக்களாக இருந்து வெளிநாட்டில் ஓராண்டுக்கு மேல் வசிப்பவராக இருந்தால், 40 கிராம் வரையிலான தங்கத்தை வரியின்றி எடுத்து வர அனுமதி அளிக்கப்படும். ஆண் என்றால் 20 கிராம் வரை நகைகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

# செல்போன் எண்ணை ‘பிளாக்’ செய்த காதலன்.. ஆத்திரத்தில் குத்திக் கொன்ற கொடூரம்

**சத்தீஸ்கர், பிப்.5:**

சத்தீஸ்கரில் 22 வயது இளம்பெண், தனது செல்போன் எண்ணை பிளாக் செய்த காதலனை வீடு தேடி சென்று மார்பில் கத்தியால் குத்தி கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நீண்ட காலமாக காதலித்து வந்த இருவருக்கும் இடையே சமீப காலமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து, காதலன் தனது செல்போன் எண்ணை பிளாக் செய்ததாக தெரிகிறது.

இதனால் மன உளைச்சலுக்கும் கடும் கோபத்திற்கும் உள்ளான காதலி, காதலன் தன்னை விட்டு வேறு பெண்ணுடன் பழகுவதாக கருதி இத்தகைய கொடூர செயலில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து தகவல் போலீசார், வழக்குப்பதிவு செய்து அப்பெண்ணை கைது செய்துள்ளனர். விசாரணை நடந்து வருகிறது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியா – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதிக்கக் கோரி திமுக எம்.பி.க்கள் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.5:**

நாடாளுமன்றபட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த மாதம் 28-ந்தேதிஜனாதிபதிஉரையுடன்தொடங்கியது. இதையடுத்து கடந்த 1-ந் தேதி 2026-27-ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. நேற்று முன்தினத்தில் இருந்து ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடந்துவருகிறது. இந்தநிலையில், இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதிக்க கோரி திமுக எம்.பி.க்கள் நோட்டீஸ் வழங்கி உள்ளனர். மக்களவையில் டி.ஆர்.பாலு மற்றும் மாநிலங்களவையில் திருச்சி சிவா ஆகியோர் நோட்டீஸ் வழங்கி உள்ளனர். இதனிடையே நேற்று சீனா ஊடுருவல் பற்றி பேச அனுமதி மறுத்ததால் மக்களவையில் அத்துமீறியதாக தமிழக எம்.பி.க்கள் உள்பட 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் கூட்டத்தொடர் முழுவதும் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களவை ஒத்திவைப்பு! நாடாளுமன்றத்தில் எம்பிக்கள் போராட்டம்!




**புதுடெல்லி, பிப்.5:**

மக்களவையில் எதிர்க்கட்சிகளின் எம்பிக்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், பகல் 1 மணிவரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்துசெவ்வாய்க்கிழமை அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், எதிர்க்கட்சி எம்பிக்களின் இடைநீக்கத்துக்கு கண்டனம் தெரிவித்து நேற்று காலை மக்களவை கூடியவுடன் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து அவை நடவடிக்கைகளை பகல் 12 மணிவரை ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார். இதனிடையே, நாடாளுமன்றத்துக்கு வளாகத்தில் இடைநீக்கம் செய்யப்பட்ட தமிழக எம்பிக்கள் மாணிக்கம் தாகூர், சு.வெங்கடேசன் உள்ளிட்ட 8 பேரும், பிரதமர் மோடி சமரசத்துக்கு உள்ளாகிவிட்டார் என்ற பதாகையுடன் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# எரிபொருள் ஸ்விட்சில் மீண்டும் பிரச்சினை: போயிங் 787 விமானங்களை ஆய்வு செய்கிறது ஏர் இந்தியா




**புதுடெல்லி, பிப்.5:**

ஏர் இந்தியா நிறுவனம் தனது போயிங் 787 ட்ரீம் லைனர் விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தி வருகிறது. அகமதாபாத் விமான விபத்துக்கு பிறகு இரண்டாவது முறையாக இந்த சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 2025 ஜூன் 12-ம் தேதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் விமானம் அடுத்த சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. இதில் 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பான முதற்கட்ட விசாரணையில், அந்த விமானத்தின் எரிபொருள் கட்டுப்பாட்டு சுவிட்ச் (எப்சிஎஸ்) அணைக்கப்பட்ட நிலையில் இருந்ததும் இதனால் எரிபொருள் சப்ளை நின்றதுமே விபத்துக்கு காரணம் என தெரியவந்தது.

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏர் இந்தியா நிறுவனம் தனது அனைத்து போயிங் 787 விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தியது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஏர் இந்தியா நிறுவனத்தின் போயிங் 787 டிரீம்லைனர் விமானம் (ஏஐ-123) லண்டனில் பெங்களூரு வந்தது. இதன் பிறகு விமான இன்ஜினை மீண்டும் ’ஸ்டார்ட்’ செய்த போது எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்ச் தானாகவே 2 முறை ‘Run’ நிலையில் இருந்து ‘Cut-off’ நிலைக்கு மாறியது. இதையடுத்து ஸ்விட்ச் செயல்பாட்டில் கோளாறு இருப்பதாக விமானி புகார் அளித்ததை தொடர்ந்து அந்த விமானம் தற்காலிகமாக பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டது.

இந்நிலையில் ஏர் இந்தியா நிறுவனம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தனது அனைத்து போயிங் 787 மற்றும் 737 விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தி வருகிறது. மேலும் இந்த விவகாரத்தை விமான உற்பத்தி நிறுவனமான போயிங் நிறுவனத்திடம் ஏர் இந்தியா நிறுவனம் கொண்டு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மும்பை விமான நிலையத்தில் 2 விமானங்கள் உரசல்; பெரும் விபத்து தவிர்ப்பு

**மும்பை, பிப்.5:**

மராட்டிய மாநிலம் மும்பை விமான நிலையத்தில் இருந்து கோவைக்கு நேற்று முன்தினம் இரவு ஏர் இந்தியா விமானம் புறப்பட தயாரானது. விமானத்தில் பயணிகள் அனைவரும் ஏறியதை தொடர்ந்து விமானம் புறப்பட ஓடுதளத்திற்கு சென்றுகொண்டிருந்தது.

அப்போது, ஐதராபாத்தில் இருந்து மும்பை வந்த இண்டிகோ விமானம் ஓடுதளத்தில் இருந்து விமானத்தை நிறுத்தும் பகுதிக்கு சென்றுகொண்டிருந்தது. அப்போது, இரு விமானங்களின் இறக்கைகளும் உரசின. இதில், விமானங்களின் இறக்கைகள் சேதமடைந்தன. இந்த சம்பவத்தால் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் இரு விமானங்களில் இருந்த பயணிகள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

# மூணாறில் இருந்து திருவனந்தபுரம், கோழிக்கோடுக்கு புதிய பஸ் சேவை




**மூணாறு, பிப்.5:**

சர்வதேச சுற்றுலா தலமாக மூணாறு விளங்குகிறது. கேரள மாநிலத்தில் பல்வேறு ஊர்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் மூணாறுக்கு வருகை தருகின்றனர். இந்தநிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மூணாறில் இருந்து திருவனந்தபுரம், கோழிக்கோடு ஆகிய நகரங்களுக்கு புதிய அரசு பஸ் சேவை நேற்று முதல் தொடங்கியுள்ளது. அதன்படி, மூணாறில் இருந்து அதிகாலை 3 மணிக்கு திருவனந்தபுரத்துக்கும், காலை 8.30 மணிக்கு கோழிக்கோடுக்கும் அரசு பஸ்கள் இயக்கப்படுகிறது. இதில், திருவனந்தபுரம் செல்லும் அரசு பஸ் கோட்டயம் வழியாக இயக்கப்படுகிறது. இந்த பஸ் இரவு 10.30 மணிக்கு மறுமார்க்கமாக திருவனந்தபுரத்தில் இருந்து மூணாறுக்கு புறப்படுகிறது. அதேபோல் கோழிக்கோடுவில் இருந்து காலை 8.30 மணிக்கு மூணாறுக்கு மற்றொரு பஸ் புறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊராட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட மகளை கொன்ற தந்தை கைது - மகாராஷ்டிர அதிர்ச்சி



**ஹைதராபாத், பிப்.5:**

தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டம், ஏஆர்பி கேம்ப் கால்வாயில் கடந்த ஜனவரி 29ம் தேதி அடையாளம் தெரியாத 6 வயது சிறுமியின் உடல் கரை ஒதுங்கியது. எடபல்லி போலீஸார் அந்த சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக நிஜாமாபாத் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதன் பின்னர், அந்த சிறுமியின் புகைப்படத்தை பல ஊர்களுக்கு அனுப்பியதோடு, பல ஊர்களில், காவல் நிலையங்களில் போஸ்டர் அடித்தும் ஒட்டினர். இந்நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்னர், எடபல்லி போலீஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணியாற்றும் சுதீர் என்பவருக்கு, மகாராஷ்டிராவில் உள்ள அவரது உறவினர்கள் போன் செய்தனர். அப்போது அவர்கள், இறந்து போன சிறுமியின் விவரங்களை எடுத்துக் கூறினார். இதனை தொடர்ந்து நிஜாமாபாத் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை தொடங்கினர். அந்த விசாரணையில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளி வந்துள்ளன. மகாராஷ்டிர மாநிலத்தில் சமீபத்தில் உள்ளாட்சி தேர்தல் நடந்து முடிந்தது. இதில் கேரூர் பகுதியை சேர்ந்த பாண்டுரங்கா என்பவரும் ஊராட்சி மன்ற தலைவராக போட்டியிட ஆசைப்பட்டார். ஆனால், அவருக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளது. 3 பிள்ளைகளின் தகப்பன் என்பதால் தேர்தல் விதிமுறைகளின்படி போட்டியிட முடியாது என தானே தீர்மானம் செய்து, மூத்த மகளான பிராச்சியை (6) கொலை செய்து விடுவது என தீர்மானித்தார். அதன் படி, கடந்த மாதம் மகள் பிராச்சியை தனது பைக்கில் உட்கார வைத்துக் கொண்டு, சுமார் 60 கி.மீ. தூரத்தில் உள்ள தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டத்துக்கு வந்தார். அங்கு ஏஆர்பி கேம்ப் கால்வாயில் மகளை அடித்து தூக்கி போட்டுவிட்டு அதே பைக்கில் மீண்டும் தனது ஊருக்கு சென்று விட்டார்.

காயம் காரணமாக பிராச்சி கால்வாயில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார். அவரது சடலம் சமீபத்தில் கரை ஒதுங்கியது. இதையடுத்து பிராச்சியின் தந்தை பாண்டுரங்காவை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# அசாம்: ரூ.60 லட்சம் மதிப்பிலான ஹெராயின் பறிமுதல்

**கச்சார், பிப்.5:**

அசாமில் போதை பொருள் கடத்தல் நடக்கிறது என கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, கச்சார் மாவட்ட போலீசாருடன் இணைந்து, அசாம் ரைபிள்ஸ் போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில், ஜிரிகாட் சந்தை அருகே நந்தன்கனன் பாலம் பகுதியில், நடந்த வேட்டையில், 116.2 கிராம் எடை கொண்ட ரூ.60 லட்சம் மதிப்பிலான ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த ஜனவரி 26-ந்தேதி 336 பைகளில் இருந்த ரூ.1.80 கோடி மதிப்பிலான போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

# மணிப்பூர் முதல்வராகும் யும்நாம் கெம்சந்த்? முடிவுக்கு வருகிறது குடியரசுத் தலைவா் ஆட்சி

**புதுடெல்லி, பிப்.5:**

மணிப்பூர் பாஜக சட்டப்பேரவைக் குழு தலைவராக யும்நாம் கெம்சந்த் தோ்வு செய்யப்பட்டுள்ளாா். இதன்மூலம், அந்த மாநிலத்தின் புதிய முதல்வராக அவா் பதவியேற்கவும், குடியரசுத் தலைவா் ஆட்சி முடிவுக்கு வந்து புதிய அரசு அமையவும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

மணிப்பூரில் மைதேயி, குகி சமூகத்தினா் இடையிலான மோதல் காரணமாக 2 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை நிலவியது. இதில் சுமாா் 260 போ் உயிரிழந்தனா். ஆயிரக்கணக்கானோா் வீடுகளை இழந்தனா்.

இந்த வன்முறை காரணமாக கடந்த ஆண்டு பிப்.9-ஆம் தேதி மாநில முதல்வா் பதவியை பிரேன் சிங் ராஜிநாமா செய்தாா். இதைத் தொடா்ந்து, அந்த ஆண்டு ஆகஸ்ட் வரை 6 மாதங்களுக்கு குடியரசுத் தலைவா் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. பின்னா், மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்ட குடியரசுத் தலைவா் ஆட்சி, வரும் பிப்.12-ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ளது.

இந்நிலையில், புது தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் மணிப்பூா் பாஜக எம்எல்ஏக்களின் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அந்த மாநில முன்னாள் முதல்வா் பிரேன் சிங், சட்டப்பேரவைத் தலைவா் சத்யபிரதா சிங், பாஜக மாநிலத் தலைவா் சாரதா தேவி உள்ளிட்டோா் கலந்துகொண்டனா். இதில் மணிப்பூா் பாஜக சட்டப்பேரவைக் குழுத் தலைவராகமைதேயி சமூகத்தைச் சோ்ந்த மாநில முன்னாள் அமைச்சா் யும்நாம் கெம்சந்த் தோ்வு செய்யப்பட்டாா். சட்டப்பேரவைக் குழு தலைவராகத் தோ்வு செய்யப்பட்டதன் மூலம், மணிப்பூரின் புதிய முதல்வராக அவா் பதவியேற்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

துணை முதல்வா் நெம்சா கிப்ஜென்?: மணிப்பூா் துணை முதல்வராக குகி சமூகத்தைச் சோ்ந்த பாஜக முன்னாள் பெண் அமைச்சா் நெம்சா கிப்ஜென் தோ்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# கொரியன் கேம் காரணமா? 9-வது மாடியிலிருந்து குதித்து 3 சகோதரிகள் பலி!

**காசியபாத், பிப்.5:**

உத்தரப்பிரதேச மாநிலம் காஸியாபாத்தில், கொரியன் கேமுக்கு அடிமையாகியிருந்த மூன்று சிறுமிகள் தங்கள் வீடு இருந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் 9-வது மாடியிலிருந்து குதித்து தற்கொலைசெய்துகொண்டனர்.

பலியானவர்கள் நிஷிகா (16), பிரச்சி (14), பாக்கி (12) என்பதும், இவர்கள் கரோனா பொது முடக்கத்துக்குப் பிறகு பள்ளிக்குச் செல்லாமல் இருந்துள்ளதும், மூத்த சகோதரி நிஷிகா நான்காவது வரை மட்டுமே பள்ளிக்குச் சென்று வந்ததும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது கொலையா? தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இவர்கள் மூவரும் நள்ளிரவு 2 மணிக்கு வீட்டின் நாற்காலி மீது ஒவ்வொருவராக ஏறி, மாடியிலிருந்து கீழே குதித்திருக்கிறார்கள்.

இந்த சம்பவம் அப்பகுதி மக்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. இந்த மூன்று பேரும், கொரியன் கேமிங் செயலிக்கு அடிமையாகியிருந்ததாகவும், அந்த கொரியன் கேமிங் ஆப் சொல்வதை இவர்கள் செய்ய வேண்டும் என்பது போல வடிவமைக்கப்பட்டிருக்கும் என்றும் அக்கம் பக்கத்தினர் தெரிவித்துள்ளனர். இவர்களது தற்கொலைக் கடிதம் கிடைத்திருப்பதாகவும், இது பற்றி விசாரணை நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் இறப்பதற்கு முன்பு எழுதியிருக்கும் தற்கொலைக் கடிதத்தில், அவர்கள் கொரிய கலாசாரத்துக்கு மாறியிருந்தது தெரிய வருகிறது. கொரியன் கேமிங் செயலிகளுக்கும் அடிமையாகியிருக்கிறார்கள். குறிப்பாக எந்த செயலி என்பதை சொல்ல முடியவில்லை. ஒட்டுமொத்த குடும்பமும் சம்பவத்தின்போது வீட்டில்தான் இருந்திருக்கிறார்கள்.

# திருமண தோஷ பரிகாரம்... பூஜை முடிந்ததும் காத்திருந்த அதிர்ச்சி

**புதுச்சேரி , பிப்.5:**

புதுச்சேரி அருகே திருமண தோஷம் நீங்க பரிகாரம் செய்வதாக கூறி, பெண்ணிடமிருந்து ஒரு சவரன் நகை மற்றும் 18ஆயிரத்து 600 ரூபாய் ரொக்க பணத்தை திருடி சென்றபோலிஜோசியர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். கோமளவள்ளி என்பவரது வீட்டிற்கு சென்ற நெல்லையை சேர்ந்த சின்னராசு மற்றும் மிக்கில் சமையல் புளியில் நகைகளை வைத்துப் பூஜை செய்வது போல நாடகமாடி, நகை மற்றும் பணத்தை திருடிசென்றுள்ளனர். கோமளவள்ளி தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் இருவரையும் கைது செய்து நகை மற்றும் பணத்தை பறிமுதல் செய்தனர்.




## மாநகராட்சி பூங்காவை சேதப்படுத்தியதாக அதிமுக மாவட்ட செயலாளர் மீது வழக்குப் பதிவு




**சென்னை, பிப்.5:** மாநகராட்சி பூங்காவை சேதப் படுத்தியதாக அதிமுக மாவட்டச் செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சென்னை, கொடுங்கையூர், அன்னை சத்யா நகரில் சாலையோர பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதை ஆர்.கே.நகர் எம்எல்ஏ ஜே.ஜே. எபினேசர் கடந்த 29-ம் தேதி திறந்து வைத்தார்.

மறுநாள் அங்கு சென்ற அதிமுக வட சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் மற்றும் சிலர் பூட்டி வைக்கப்பட்டிருந்த சாலையோர பூங்காவில் நுழைந்து மின் விளக்குகள், புல்வெளிகள் மற்றும் இரும்புக் கம்பிகளை சேதப் படுத்தியதாக கூறப்படுகிறது.

மேலும், தரமற்ற முறையில் பூங்கா கட்டப்பட்டிருப்பதாக சமூக வலைதளங்களில் வீடியோ வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக, சென்னை மாநகராட்சியின் 4-வது மண்டல உதவிப் பொறியாளர் சத்யன் கொடுங்கையூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி போலீஸார் ஆர்.எஸ்.ராஜேஷ் உட்பட மேலும் சிலர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதற்கிடையே, உதவிப் பொறியாளர் சத்யன் தூண்டுதலின் பேரில் தமிழரசன் என்பவர் வீடு தேடி வந்து மிரட்டிவிட்டுச் சென்றதாக தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் ஆர்.எஸ்.ராஜேஷ் புகார் அளித்துள்ளார். அதுகுறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

## கார் கண்ணாடிகளை உடைத்த ரஷ்ய சுற்றுலாப் பயணி: மதுரை போலீஸார் தீவிர விசாரணை



**மதுரை, பிப்.5:** மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே சாலையில் அரைகுறை ஆடையுடன் ஒருவர் கையில் கத்தி, கற்களுடன் சுற்றித்திரிந்தார். அவர் திடீரென சாலையோரத்தில் நிறுத்தி இருந்த கார்கள் மீது கற்களை வீசி கண்ணாடிகளை உடைத்தார்.


வெளிநாட்டுக்காரர் தோற்றத்தில் இருந்த அவரது செயலைத் தடுக்க அப்பகுதியினர் முற்பட்டனர். ஆனால், தான் வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டியதால் பொதுமக்கள் அலறியடித்து ஓடினர்.

இதுகுறித்து தகவலறிந்த அண்ணா நகர் போலீஸார் அங்கு சென்று, அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது, அரைகுறை ஆடையுடன் சுற்றிய அந்நபர் போலீஸாரிடமும் கத்தியைக் காட்டி மிரட்டினார். ஒரு வழியாக அவரை சுற்றி வளைத்துப் பிடித்த போலீஸார், அவரிடம் இருந்த கத்தியை பறித்தனர்.

பின்னர் அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் வைத்திருந்த பையில் சோதனையிட்ட போது, அவரது பாஸ்போர்ட் சிக்கியது.

அவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் (51) என்பதும், சுற்றுலா விசாவில் மதுரை வந்திருப்பதும் தெரியவந்தது. மது போதையில் அவ்வாறு செய்தாரா அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது குறித்து அண்ணா நகர் போலீஸார் விசாரிக்கின்றனர்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.4.09 கோடி கடத்தல் தங்கம் பறிமுதல்!



**சென்னை, பிப்.5:** துபையிலிருந்து பெண் பயணியொருவர் கடத்தி வந்த ரூ. 1.37 கோடி மதிப்பிலான பசை வடிவிலான தங்கத்தை சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள், இது தொடர்பாக பெண் பயணிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

துபையில் இருந்து சென்னை வரும் விமானத்தில் தங்கம் கடத்தி வரப்படுவதாக புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் சென்னை பன்னாட்டு விமானநிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளை ரகசியமாக கண்காணித்தனர்.

அப்போது, துபையிலிருந்து சென்னை பன்னாட்டு விமான நிலையத்துக்கு வந்த சந்தேகத்துக்கிடமான பெண் பயணி ஒருவரை மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அதில், அவர் மறைந்து வைத்திருந்த ரூ. 1.37 கோடி மதிப்பிலான பசை வடிவிலான தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து, அடுத்தடுத்து சென்னை பன்னாட்டு விமானநிலையத்துக்கு வந்த விமான பயணிகளில் சந்தேகத்தின்பேரில் 3 பேரை நிறுத்தி மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அதில், அவர்கள் மறைத்து வைத்திருந்த தங்க நகைகள், வெளிநாட்டு ஹவாலா பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதன்படி, சென்னை பன்னாட்டு விமானநிலையத்தில் அடுத்தடுத்து விமான பயணிகளிடம் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.4.09 கோடி மதிப்பிலான தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் ஒரு பெண் உள்பட நான்கு பேரை கைது செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தஞ்சை அருகே மாதாக்கோட்டையில் ஜல்லிக்கட்டு போட்டி: சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கிய வீரர்கள்



**தஞ்சாவூர், பிப்.5:** தஞ்சை அருகே மாதாக்கோட்டையில் லூர்து மாதா ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் ஆண்டுதோறும் ஜல்லிக் கட்டு போட்டி நடந்து வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி இன்று காலை விறுவிறுப்பாக தொடங்கியது. இந்த போட்டியை கோட்டாட்சியர் நித்யா, தாசில்தார் சிவக்குமார் ஆகியோர் உறுதிமொழி வாசித்து தொடங்கி வைத்தனர். இந்த உறுதிமொழியை மாடுபிடி வீரர்கள் வாசித்து ஏற்றுக் கொண்டனர்.

அதைத்தொடர்ந்து, வாடிவாசலில் இருந்து தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட 700 காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டன. இந்த காளைகளை பிடிக்க சுற்றுக்கு மொத்தம் 40 பேர் அனுமதிக்கப்பட்டனர். மாடுபிடி வீரர்கள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவாக களமிறக்கப்பட்டனர்.

அப்போது வாடிவாசலில் இருந்து அவிழ்க்கப்பட்டு சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கி இளம் காளையர்கள் பார்வையாளர்களிடம் பாராட்டுக்களை பெற்றனர்.

மாடுபிடி வீரர்கள் தடுமாறி கீழே விழுந்தால் காயம் ஏற்படாமல் இருக்கும் வகையில் வாடிவாசலில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவுக்கு தரையில் தேங்காய் நார் போடப்பட்டிருந்தது.

இந்த போட்டியில் ஏராளமான வீரர்கள் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்து வந்த காளைகளை வீரத்துடன் அடக்கினர். அதேபோல் காளைகளும் சிறப்பாக களமாடி வீரர்களை பந்தாடின. இதில் சிறந்த மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளின் உரிமையாளர்களுக்கு சைக்கிள், டைனிங் டேபிள், சில்வர் அண்டா, பேன் போன்றவை பரிசுகளாக வழங்கப்பட்டன.

முன்னதாக, மாடுபிடி வீரர்களை சுகாதாரத்துறையை சேர்ந்த மருத்துவக் குழுவினர் உடல்பரி சோதனை செய்து தகுதியான வீரர்களை மட்டுமே களத்துக்குள் செல்ல அனுமதித்தனர். இதேபோல, காளைகளையும் கால்நடை பராமரிப்புத்துறையினர் பரிசோதனை செய்தனர்.

தஞ்சை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ராஜாராம் உத்தரவின் பேரில் வல்லம் துணை போலீஸ் சூப்பிரண்டு காயத்ரி தலைமையில் 400-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெறும் முதல் ஜல்லிக்கட்டு போட்டி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

## மயிலாடுதுறையில் நில அதிர்வு ஏற்பட்டதா? - தமிழக அரசு விளக்கம்




**சீர்காழி, பிப்.5:** சீர்காழி மற்றும் தரங்கம்பாடி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2-ந்தேதி காலை அதிக சத்தம் உணரப்பட்டதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து தமிழக அரசின் சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது.

வானத்திலிருந்து திடீர் சத்தம் கேட்டதால் மயிலாடுதுறை மக்கள் மீண்டும் அச்சத்தில் உள்ளனர் என்று குறிப்பிட்டு ஒரு தகவல் சமூக வலைத்தளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இது பொதுமக்கள் இடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து தமிழக அரசின் சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்து வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:-

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அளித்துள்ள விளக்கத்தில், "மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மற்றும் தரங்கம்பாடி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2-ந்தேதி காலை 10.20 மணி முதல் 10.30 மணி வரை அதிக சத்தம் உணரப்பட்டதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட சத்தம் 'ஜெட்' பயிற்சி விமான சத்தம் என்பதையும், நில அதிர்வு அல்லது நிலநடுக்கம் எதுவும் மேற்கண்ட பகுதிகளில் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். தவறான தகவலைப் பரப்பாதீர்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஜெய்ப்பூர்-கோவை சிறப்பு ரெயில் மாற்றுப் பாதையில் இயக்கம்- தெற்கு ரெயில்வே அறிவிப்பு



**சென்னை, பிப்.5:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை கோட்டத்தில் நடைபெறும் பராமரிப்பு பணி காரணமாக சில ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்விவரம் வருமாறு:-

* ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இருந்து வருகிற 8-ந்தேதி இரவு 10.05 மணிக்கு புறப்பட்டு கோவை வரும் சிறப்பு ரெயில் (வண்டி எண்.06182), ரேணிகுண்டா, பகலா, காட்பாடி ஆகிய மாற்றுப்பாதை வழியாக இயக்கப்படும்.

*அசாம் மாநிலம் திப்ருகாரில் இருந்து வருகிற 8-ந்தேதி இரவு 7.35 மணிக்கு புறப்பட்டு கன்னியாகுமரி வரும் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் (22504), 1 மணி நேரம் 45 நிமிடம் தாமதமாக புறப்படும்.

*காச்சிகுடாவில் இருந்து வருகிற 10-ந்தேதி மாலை 5 மணிக்கு புறப்பட்டு செங்கல்பட்டு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (17652), 1 மணி நேரம் தாமதமாக புறப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## சென்னையில் இன்று (05.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...



**சென்னை, பிப்.5:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (05.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

திருமுடிவாக்கம்: சோமங்கலம், மேலத்தூர், டிசி நகர், சக்தி நகர், புதுப்பேடு மேடு, புதுப்பேடு பள்ளம், சிஐடி கல்லூரி, நடுவீரப்பட்டு காந்தி நகர், நடுவீரப்பட்டு ராம்ஜி நகர், தாம்பரம் மெயின் ரோடு, பூந்தண்டலம்.

ராஜகீழ்பாக்கம்: வேளச்சேரி மெயின் ரோடு, மேத்தா நகர் மெயின் ரோடு, மகாலட்சுமி நகர் மெயின் சாலை, மாருதி நகர், கோமதி நகர், ஐயப்ப நகர், விவேகந்தன் தெரு, ரசுகி தெரு, வேணுகோபால் தெரு, அண்ணா தெரு, பாரதியார் தெரு, திருமகள் நகர், கார்த்திக் அவென்யூ, பிரதீப் அவென்யூ, குருநாதர் தெரு, ரங்கா காலனி, வ உ சி தெரு, நேதாஜி தெரு, பவானந்தியர் தெரு, மாரி அம்மன் கோவில் தெரு, சாம் அவென்யூ, செம்பாக்கம் மெயின் ரோடு, மகா சக்தி காலனி, ஐஓபி காலனி, கேம்ப் ரோடு, கர்ணம் தெரும், கண்ணன் நகர், அவ்வை நகர், பாரதி நகர், மாடம்பாக்கம் மெயின் ரோடு, பொன்னியம்மான் கோவில், தெரு, சின்மயி காலனி, கம்பர் தெரு, மணிவாசகர் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, கனகராஜ் தெரு, அம்பேத்கர் தெரு, அண்ணா தெரு, ராஜீவ் காந்தி நகர், கலைஞர் கருணாநிதி நகர், துர்கா காலனி, வெங்கடராமன் நகர், சிவகாமி நகர், முத்தமிழ் நகர், சிட்லபாக்கம், மணவாள நகர், ஏரிக்கரை தெரு.

திருவேற்காடு: சன்னதி தெரு, திருவேங்கட நகர், சின்ன கோலடி, கிருஷ்ணா நகர்.

## நெல்லையப்பர் கோவிலில் நரிக்குறவர் சிறுவர்களுக்கு உணவு வழங்கப்படவில்லையா? - மேயர் விளக்கம்



**நெல்லை, பிப்.5:** நெல்லையப்பர் கோவில் சமபந்தியில் நரிக்குறவர் சிறுவர்கள் அனுமதிக்கப்படவில்லை என புகார் எழுந்ததையடுத்து, தவறான தகவலை திட்டமிட்டு பரப்புவதாக நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் விளக்கம் அளித்தார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:

* அண்ணா நினைவு நாள் சமபந்தியில் நரிக்குறவரின சிறுவர்கள் விரட்டியடிப்பு என திட்டமிட்டு வதந்தி பரப்பப்படுகிறது.

*நெல்லையப்பர் கோவிலில் சமபந்தி விருந்தில் சுமார் 900 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. நானே நேரில் ஆய்வு செய்தேன்.

* பிற்பகல் 1.20 மணிக்கு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

*சமூகநீதி கடைபிடிக்கப்பட்டு அனைவருக்கும் சமமான உணவு வழங்கப்பட்டது.

* தானும் சபாநாயகரும் அங்கு இருந்தவர்களுடன் அமர்ந்து சமபந்தி உணவை அருந்தினோம்.

*என்னுடன் அமர்ந்திருந்த பெண் வீட்டிற்கு உணவு வேண்டும் என கேட்டார். அவருக்கும் பார்சல் செய்து கொடுத்தோம்.

*வதந்தி பரப்பும் நபர் உணவு தீர்ந்த பின்னர் குழந்தைகளை அழைத்து வந்தார்.

*முறையாக கோவில் ஊழியர் அவரிடம் உணவு இல்லை என்பதை எடுத்துரைத்தார்.

* அரசியல் தூண்டுதலின் பேரில் குறிப்பிட்ட நபர் வேண்டுமென்றே வதந்தி பரப்பு வருகிறார்.

* சமூக நீதிக்கு இழுக்கு ஏற்படுத்தும் எந்த செயலும் நெல்லையப்பர் கோவிலில் நடக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## தூய்மைக் காவலர்களின் மதிப்பூதியம் ரூ.6 ஆயிரமாக உயர்வு - அரசாணை வெளியீடு



**சென்னை, பிப்.5:** தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தூய்மையாக வைத்திருக்கும் வகையில், தூய்மைக் காவலர்கள் கிராம ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரித்து, மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாகத் தரம் பிரித்து, உரமாக்குதல், நெகிழிக் கழிவுகளை மறுசுழற்சிக்கு அனுப்புதல் மற்றும் ஊராட்சியை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரித்தல் போன்ற முக்கியப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

திடக்கழிவு மேலாண்மையில் இவர்களின் பங்கு மிக முக்கியமானது.

கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் தூய்மைக் காவலர்களின் மாதாந்திர மதிப்பூதியம் உயர்த்தப்பட வேண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணியாற்றும் தூய்மைக் காவலர்களுக்கான மதிப்பூதியம் ரூ.5,000-ல் இருந்து ரூ.6,000ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்காக ரூ.417 கோடி கூடுதல் நிதியை ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது.

## திண்டுக்கல் அறிவியல் கண்காட்சியில் சிறிய ரக விமான மாதிரியை தயாரித்து பறக்கவிட்ட மாணவன்



**திண்டுக்கல், பிப்.5:** திண்டுக்கல் ஆர்.எம்.காலனி பகுதியை சேர்ந்த நல்லையா நடராஜன் மகன் பழனிவேல் ராஜன் (வயது 17). தனியார் பள்ளியில் பிளஸ்-2 படித்து வருகிறார். இவர் சிறிய ரக விதை நடும் விமானத்தை தயாரித்து, திண்டுக்கல்லில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் பறக்க விட்டார். இது அங்கு வந்து பார்வையிட்ட மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்களை அதிகம் கவர்ந்தது.

இதுகுறித்து மாணவர் பழனிவேல் ராஜன் கூறுகையில், சிறு வயதிலிருந்தே விமானம் மற்றும் அது பறப்பது பற்றி ஆர்வங்கள் எழுந்து வந்தது. 9ம் வகுப்பு படிக்கும் போது இதில் ஆர்வம் அதிகரித்தது. கொரோனா காலத்தில் செல்போன் மூலம் வீட்டில் இருந்தபடியே படிக்கும் நிலை உருவானது. இதனால் செல்போன் பயன்படுத்துவது அதிகமானது. அப்போது யூடியூப் மூலம் விமானம் குறித்த பல தகவல்களை அறிந்து சேகரித்தேன். அதை தொடர்ந்து விமானம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

இதுவரை 15 சிறியரக விமான மாதிரிகளை தயாரித்து பறக்க விட்டு உள்ளேன். தமிழகம், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் கண்காட்சியில் கலந்து கொண்டு பாராட்டு பரிசுகளை பெற்றுள்ளேன்.

தற்போது திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் அறிவியல் கண்காட்சியில் விதை நடும் சிறிய ரக விமானம் தயாரித்து பறக்க விட்டேன். தெர்மாகோல் அட்டை, குடை கம்பி, ஐஸ் குச்சி, சிறிய மூங்கில் குச்சி, ட்ரான்ஸ்மீட்டர், ரிசீவர் கொண்டு தயாரித்துள்ளேன். இதில் டிரான்ஸ் மீட்டர், ரிசீவர் மட்டும் ஆன்லைன் மூலம் வாங்கி பயன்படுத்தியுள்ளேன். ரூ.12 ஆயிரம் செலவில் ரிமோட்டுடன், 1850 மில்லியன் ஆம்ஸ் திறன் கொண்ட பேட்டரி, 850 கிராம் எடையுடன் 25 நிமிடம் வானில் பறக்கும் வகையில் சிறிய ரக விமான மாதிரியை தயாரித்தேன்.

அழியும் காடுகளை மீட்டு எடுக்க, விதை பந்து வீசும் வகையில் இதனை வடிவமைத்துள்ளேன். ஏரோநாட்டிக்கல் துறையில் சாதிக்க வேண்டும் என்பது எனது குறிக்கோள். கணித கம்ப்யூட்டர் அறிவியல் பாட பிரிவு எடுத்து படித்து வருகிறேன். யாருடைய வழிகாட்டுதலும் இல்லாமல், யூடியூப் பார்த்து செய்து முடித்துள்ளேன் என்றார். அவருக்கு ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# கொலை செய்யப்பட்ட பிஹார் குடும்பத்தினரின் உடல்களை சொந்த ஊர் கொண்டு செல்ல நடவடிக்கை: முதல்வர் உத்தரவு




**சென்னை, பிப்.5:** கொலை செய்யப்பட்ட பிஹார் தம்பதி மற்றும் குழந்தையின் உடல்களை கட்டணமின்றி சொந்த மாநிலத்தில் உறவினர்களிடம் ஒப்படைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

வேலை தேடி சென்னை வந்த, பிஹார் மாநிலம், ஷேக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர் கவுரவ் குமார், மனைவி புனிதா குமாரி, அவர்களின் 2 வயது குழந்தை ஆகியோர் இங்கு அதே மாநிலத்தைச் சேர்ந்த 3 பேரால் கொலை செய்யப்பட்டனர்.

இதையடுத்து கொலையாளிகள் மூவரையும் போலீஸார் கைது செய்தனர். கொலை செய்யப்பட்ட மூவரின் குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்ததால், அவர்களின் உடல்களை அவர்களது சொந்த மாநிலத்துக்கு கொண்டு செல்ல உதவி தேவைப்படுவதாக தகவல் வெளியானது.

இதையறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக சுகாதாரத் துறை மூலம் எவ்வித கட்டணமுமின்றி, அவர்களது உடல்களை சொந்த மாநிலத்துக்கு கொண்டு சென்று உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# செங்கரைப்பாளையத்தில் மாகாளியம்மன் பொங்கல் பண்டிகை



**ஈரோடு, பிப்.5:** ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம் செங்கரைப்பாளையம் ஊரில் வேண்டிய வேண்டுதல்கள் நிறைவேற்றித் தரும் வரமளிக்கும் சக்தி மிக்க அம்பாள் "ஸ்ரீ மாகாளியம்மன்" என்னும் பெயரில் எழுந்தருளி உள்ளார். அவருக்கு உள்ளூர் மக்கள் ஆண்டுதோறும் தை மாதம் கடைசி வாரத்தில் பொங்கல் வைத்து வழிபட்டு வருகிறார்கள்.

இந்த வருடம் 30.01.2026 வெள்ளிக்கிழமை அன்று கும்பம் அலங்கரித்து பூச்சாட்டப்பட்டது. தினமும் அம்மனை அலங்கரித்து கோயில் வளாகத்திற்குள் சாமி எதிரே உள்ள அக்னிக் குண்டத்தை சுற்றி கோவிலில் பூசாரி மும் தொடர்ந்து மக்களும் மகிழ்ச்சியுடன் ஆட்டம் ஆடி வந்தார்கள்.

செவ்வாய்க்கிழமையன்று மாலையில் நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் என ஊர்மக்கள் காவேரி ஆறு சென்று தீர்த்தம் கொண்டு வந்தார்கள். 04.02.2026 புதன் கிழமை அதிகாலை சுமார் 50 மகளிர் மாவிளக்கு எடுத்து வந்தனர். வான வேடிக்கையுடன் மாவிளக்கு பூஜை செய்யப்பட்டது. காலையில் பொங்கல் வைத்த பின்னர் ஒவ்வொரு பொங்கலிலும் கொஞ்சம் கொஞ்சம் பொங்கல் சாதம் எடுத்து சாமி முன் படைத்து, மதியம் பெரும்பூஜை செய்யப்படும்.

பின்னர் மாலையில் அலங்கரிக்கப்பட்ட கும்பம் வழிநெடுகிலும் மக்கள் ஆட்டம் நாட்டம் என ஆரவாரத்துக்கிடையே கொண்டு போய் கிணற்றில் விட்டு பொங்கல் பண்டிகை நிறைவு காணும். 06.02.2026 வெள்ளிக்கிழமை மறுபூஜை செய்யப்பட்டு பொங்கல் பண்டிகை இனிதே நிறைவு பெறும். பொதுமக்கள் செங்கரைப்பாளையம் அம்மன் கோவிலில் வந்து தங்கள் வேண்டுதல்களை வைத்து வணங்கி வேண்டும் வரம் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கிறோம் நன்றி! வணக்கம்!

# வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை செய்து கருவின் பாலினத்தை தெரிவித்தால் கடும் நடவடிக்கை

**சென்னை, பிப்.5:** வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்டு, கருவின் பாலினத்தை தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்புக்கு முந்தைய கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலினதேர்வை தடை செய்தல்) சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மாநில மேற்பார்வை குழு கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது.

சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் துறையின் செயலர் இந்த சட்ட செயல்பாடுகளின் ஆய்வு நடைபெற்றது. சுகாதாரத்துறையின் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த 1994-ல் பெண் குழந்தைகள் கருக்கலைப்பை தடுக்கும் நோக்கில் இயற்றப்பட்ட இந்த சட்டமானது 2003 -ல் திருத்தம் செய்யப்பட்டு கருவுறுதலுக்கு முன் பாலின தேர்வைதடை செய்யும் முறைகளும், சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்த சட்டத்தின்படி பதிவு பெற்ற அரசில் 1,727, தனியாரில் 7,343 என மொத்தம் மொத்தம் 9,070 ஸ்கேன் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் மண்டல வாரியாக திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது. முதல்கட்டமாக சென்னை, கோவை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 6 மண்டலங்களில் நடைபெற்றதில், 2,492 தனியார், அரசுமருத்துவர்கள் பயிற்சி பெற்றனர்.

மாநிலத்தில் செயல்பட்டு வரும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ளும் செயல்பாடுகளை பரிசீலனை செய்து உரிய ஆலோசனைகளை இக்குழு வழங்கியது.

சட்டத்தை பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டது. வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்டு, கருவின் பாலினத்தை தெரிவிக்கும் இந்தியர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2025-ல் சட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்ட 15 ஸ்கேன் மையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 38 மாவட்டங்களில் உள்ள ஆலோசனை குழுக்கள் மூலம் 1,747 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1,608 மையங்கள் 2025-ம் ஆண்டில் மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

பாலினம் விகிதம் 2021-22 -ம் ஆண்டில் 934 என இருந்தது. தற்போது 2025-26-ம் ஆண்டில் 941 என உயர்ந்துள்ளது. மாநில மேற்பார்வைக் குழுவினை வலுப்படுத்தி, அதன் செயல்பாடுகளை பயனுள்ளதாக அமல்படுத்துவதன் மூலம், மாநிலத்தின் பெண்சிசுக்கொலைகள் குறைந்து பெண்களின் பாலின விகிதம் மேம்படும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் காய்ச்சல் பாதிப்பை தடுக்கும் பணிகள் தீவிரம்: பொது சுகாதாரத் துறை

**சென்னை, பிப்.5:** தமிழகத்தில் காய்ச்சல் பாதிப்புகளைத் தடுக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனா.

மாநிலம் முழுதும் கொசு ஒழிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டு, டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் பாதிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 1,500 பேர டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனா. மேலும், எலிக்காய்ச்சலால் 206 பேரும், சிக்குன்குனியாவால் 43 பேரும், மலேரியாவால் 9 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனா.

இந்த வகை காய்ச்சல் பாதிப்புகளால் உயிரிழப்பு ஏற்படவில்லை என்றாலும், காய்ச்சல் பாதிப்புகளைத் தடுக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:


தமிழகத்தில் கடந்த ஆண்டு 25,521 பேர டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 12 பேர உயிரிழந்தனா. அதேபோல், 321 பேர மலேரியாவால் பாதிக்கப்பட்டு 2 பேர இறந்தனா. இந்த ஆண்டின் தொடாச்சியே ஜனவரி மாதத்தில் டெங்கு போன்ற பாதிப்புகள் தொடாகிறது. அதேநேரம், சிக்குன்குனியா பாதிப்பு சற்று அதிகரித்துள்ளது. இதுபோன்ற காய்ச்சல் பாதிப்புகள், மாாச் மாதத்துக்குப் பின் குறையத் தொடங்கும். காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டால் அலட்சியம் காட்டாமல் மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களிலும் நன்னீா தேங்காதவாறு சுகாதாரமாக பராமரிக்க

# புதுச்சேரி சட்டசபையில் 12-ந்தேதி இடைக்கால பட்ஜெட்

**புதுச்சேரி, பிப்.05:** புதுவை சட்டசபையில் ஆண்டு தோறும் மார்ச் மாதம் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்.

நடப்பு ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால் முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்ய முடியாது. அதோடு தேர்தல் தேதியும் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. எனவே அதற்கு முன்பாக சட்டசபை கூடி அரசின் செலவினங்களுக்கான இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும். இதற்காக வருகிற 12-ந்தேதி புதுச்சேரி சட்டசபை கூடுகிறது.

அன்றைய தினம் முதலமைச்சரும் நிதி அமைச்சருமானா ரங்கசாமி அரசின் 4 அல்லது 5 மாதங்களுக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். இதனை சபாநாயகர் ஏம்பலம் செல்வம் அறிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-



15-வது புதுச்சேரி சட்டப்பேரவையின் 6-வது கூட்டத்தொடர் கடந்த ஆண்டு மார்ச் 10-ந்தேதி அன்று கூட்டப்பட்டு 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கவர்னர் உரையுடன் தொடங்கிய அந்த கூட்டத்தொடர் 13 நாட்கள் நடைபெற்று பின்னர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

அதன் 2-ம் பகுதி கடந்த செப்டம்பர் 18-ந்தேதி அன்று கூட்டப்பட்டு பேரவையின் அனைத்து அலுவல்களும் அன்றைய தினத்திலேயே நிறைவேற்றப்பட்டு மீண்டும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 6-வது கூட்டத்தொடரின் 3-வது பகுதி வருகிற 12-ந்தேதி (வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு சட்டப்பேரவை வளகத்தில் உள்ள பேரவைக் கூட்டத்தில் மீண்டும் கூட்டப்படும்.

அரசின் அன்றைய தினத்தில் 2026-27-ம் நிதி ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை பேரவையில் முதலமைச்சர் தாக்கல் செய்கிறார். பேரவையில் முன்வைக்க வேண்டிய விதிகள் மற்றும் ஏடுகள் ஏதேனும் இருந்தால், அவற்றையும் அன்றைய தினம் வைக்க அரசு துறைகளுக்கு அறுவுறுத்தப்படும். மேலும் 2025-2026 நிதி ஆண்டுக்கான கூடுதல் செலவினத்துக்கும் சட்டப்பேரவையில் ஒப்புதல் கோரப்படும்.




# விஜய்க்கு ஒன்றுமே தெரியவில்லை - எடப்பாடி பழனிசாமி கடும் தாக்கு



**சென்னை, பிப்.5:** அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை அடுத்து தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு 2-ம் கட்ட வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி இன்று அறிவித்தார். அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி தமிழகம் தலை தொங்கி காட்சியளித்து கொண்டிருப்பதாக விமர்சித்தார். மேலும் அவர் கூறுகையில்,

* 2 மாதங்களுக்கு முன்னர் அ.தி.மு.க. கூட்டணி குறித்து பலரும் கிண்டல் செய்தனர்.

* தற்போது தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணி தான் பலம் வாய்ந்த கூட்டணியாக உள்ளது.

* தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அ.தி.மு.க. தான் தலைமை வகிக்கும்.

* நாட்டை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ள அதிமுகவும் தேசிய அளவிலான கட்சி.

* கரூர் சம்பவம் நடந்து 75 நாட்கள் கடந்து வீட்டை விட்டு வெளியே வந்தவர் விஜய்.

* நாட்டில் என்ன நடக்கிறது என்றே த.வெ.க. தலைவர் விஜய்க்கு தெரியவில்லை. பொதுவெளியில் வந்தால் தான் நாட்டில் என்ன நடக்கிறது என தெரியும்.

* ஒரு கட்சியின் தலைவருக்கு நாட்டில் என்ன நடக்கிறது எனத் தெரிந்திருக்க வேண்டும்.

* அ.தி.மு.க. ஆட்சியை எப்படி ஊழல் ஆட்சி என விஜய் கூற முடியும்?

* விஜய் மக்களையும் பார்க்கவில்லை, தொலைக்காட்சியையும் பார்க்கவில்லை.

* விஜய் நேரில் செய்தியாளர்களை ஒருமுறையாவது சந்திக்க வேண்டும், அப்போதுதான் தமிழ்நாட்டில் உண்மை நிலவரம் அவருக்கு தெரியும்.

* ஊழல் வழக்கில் சிறை சென்ற செங்கோட்டையனை அருகில் வைத்துக்கொண்டு ஊழல் குறித்து விஜய் பேசுகிறார்.

* சசிகலாவை அ.தி.மு.க.வில் சேர்க்கும் விவகாரம் என்பது முடிந்து போன கதை.

* சசிகலா விவகாரம் குறித்து ஏற்கனவே பலமுறை தெளிவுப்படுத்தி விட்டேன்.

* ஜெயலலிதாவின் ஆன்மா துரத்தியதால் தான் மனோஜ் பாண்டியன் தி.மு.க.விற்கு சென்று விட்டார்.

* எங்கள் மீது குறை கூற ஒன்றும் இல்லை, எந்த தவறும் செய்யாத அதிமுக மீது குறைகளை முதல்வர் தேடிக்கொண்டிருக்கிறார்.

* பொம்மை முதல்வர், திறமையற்ற முதல்வர் என மு.க.ஸ்டாலின் குறித்து கடுமையாக விமர்சித்தார்.

# பாஜக அரசை கண்டித்து இன்று நடைபயணம்: செல்வப்பெருந்தகை அறிவிப்பு



**சென்னை, பிப்.5:** தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் நோக்கத்தோடு செயல்படும் பாஜக அரசைகண்டித்து, அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டியின் அறிவுறுத்தலின்படி தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பிப்.5-ம் தேதி (நாளை) மதியம் 2 மணியளவில் எனது தலைமையில் சென்னை, திருவள்ளூர், ஆவடி, செங்கல்பட்டு, காஞ்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் முன்னிலையில் நடைபயணம், கிழக்கு தாம்பரம்-பாரத மாதா தெரு, வேளச்சேரி சாலை சந்திப்பில் அமைந்துள்ள காமராஜர் சிலை அருகிலிருந்து, மேற்கு தாம்பரம் - சண்முகம் சாலை வரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதேபோன்று, பிப்.7-ம் தேதி திருச்சியிலும், 8-ம் தேதி திண்டுக்கல்லிலும், 9-ம் தேதி தென்காசியிலும், 12-ம் தேதி கோவையிலும் நடைபயணம் நடைபெறும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முதல்வருக்கு நன்றி: செல்வப்பெருந்தகை வெளியிட்ட மற்றொரு அறிக்கையில் “சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்துக்கு இந்திரா காந்தியின் பெயரை சூட்ட வேண்டுமென்று முதல் வருக்கு கோரிக்கை விடுத்திருந்தோம்.

அதன்படி இந்திரா காந்தியின் பெயரை சூட்டி அறிவிப்பு வெளியிட்ட

# பிப். 13 – சேலத்தில் விஜய் பிரசாரம்!

**சேலம், பிப்.5:** சேலத்தின் தவெக தலைவர் விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி கோரி அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் காவல் ஆணையரிடம் மனு அளித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அரசியல் கட்சிகள் பிரசாரத்தை தொடங்கியுள்ளன.

இந்த தேர்தலில் முதல்முறையாக தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடவுள்ள நிலையில், கடந்த சில மாதங்களாக தீவிரப் பிரசாரத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடந்த செப். 27 அன்று கரூரில் விஜய் பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். அதன்பிறகு விஜய் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டிருந்த பிரசாரக் கூட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.

இந்த சம்பவத்துக்குப் பிறகு முதல்முறையாக பெருந்துறை அருகே விஜயமங்கலம் பகுதியில் திறந்தவெளி திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்று விஜய் பேசினார்.

தற்போது சேலத்தில் வருகின்ற பிப். 13 ஆம் தேதி விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி கோரி மாநகரக் காவல் ஆணையரை சந்தித்து சேலம் மத்திய மாவட்ட தவெக செயலாளர் தமிழன் பார்த்திபன் மனு அளித்துள்ளார்.

இந்த கூட்டத்துக்கு அனுமதி வழங்கப்படுவது குறித்தும், நிபந்தனைகள்

# தண்ணீர் திவால் நிலைக்கு உலகம் தள்ளப்பட்டிருக்கிறது- அதிர்ச்சி தகவல்

**சென்னை, பிப்.5:** ஒரு நபர் தன்னுடைய வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்யும்போது, அவர் பொருளாதாரச் சிக்கலில் வீழ்வது இயற்கை. இதனை அவர் திவாலாகிவிட்டார் என்றும் சொல்வார்கள். அதுவே நீர்வளத்திற்கு நடந்தால்? சற்று யோசித்து பாருங்கள்.

கடந்த சில 10 ஆண்டுகளாக இயற்கை வழங்கும் நீரைவிட, நாம் சுரண்டிய நீரின் அளவு பலமடங்கு அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள ‘உலகளாவிய தண்ணீர் திவால்’ அறிக்கை, நிலத்தடி நீர் வற்றி வருவது மற்றும் மாறிவரும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படப்போகும் சமூக, பொருளாதாரப் பாதிப்புகளை விரிவாகப் பட்டியலிட்டு இருக்கிறது.

இந்த அறிக்கை வெறும் தண்ணீர் தட்டுப்பாடு என்பதைத் தாண்டி, நாம் மீளமுடியாத ஒரு பேராபத்தில் சிக்கியுள்ளோம் என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்தியுள்ளது. மேலும் இதனை வெறும் எச்சரிக்கையாக மட்டுமில்லாமல், மனிதகுலத்தின் வாழ்வாதாரத்திற்கான அபாய சங்காகவும் ஊதியுள்ளது.

அப்படி என்னதான் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அதில்



இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

உலகில் 20 பெரிய நிலத்தடி நீர் நிலைகளில் 13 நீர்நிலைகள் மரண நிலையில் இருக்கின்றன. குறிப்பாக இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதிகளில் நிலத்தடிநீர் மீண்டும் ஊற்று எடுக்க வாய்ப்பே இல்லாத ஆழத்துக்கு சென்றுவிட்டது.

மழை மற்றும் பனி உருகுவதன் மூலம் இயற்கையாகக் கிடைக்கும் நன்னீரின் அளவைவிட, நாம் பயன்படுத்தும் நீரின் அளவு பலமடங்கு அதிகரித்துள்ளது. நாம் இயற்கையின் ‘சேமிப்பான’ நிலத்தடி நீரையும், பனிப்பாறைகளையும் வேகமாகச் செலவழித்து வருகிறோம்.

நன்னீர் பயன்பாட்டில் சுமார் 70 சதவீதத்தை விவசாயத்துக்கு பயன்படுத்துகிறோம்.

உலகளவில் உள்ள 70 சதவீத முக்கியமான நிலத்தடிநீர் ஆதாரங்கள் வேகமாக வறண்டு வருகின்றன.

இயற்கையாக நிலத்தடி நீர் மீண்டும் ஊற்றெடுக்க எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட நாம் அதனை உறிஞ்சு எடுக்கக் கூடிய வேகம் அதிகமாக உள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, நிலப்பரப்பு உள்வாங்கும் அபாயம் உள்ளது.

3-ம் உலகப் போர்

காலநிலை மாற்றத்தால் மழைப்பொழிவு சீரற்றுப் போய் இருக்கிறது. நதிகளின் ஆதாரமான பனிப்பாறைகள் 1970-க்கு பிறகு 30 சதவீதம் உருகிவிட்டன.

நிலத்தடி நீரை சேமிக்கும் வங்கிகளாக செயல்பட்டு வந்த ஏரிகள், குளங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் அழிந்து நீர் சுழற்சி பாதிக்கப்பட்டிருக்கிறது.

நகரமயமாக்கல் மற்றும் மாசுபாடு காரணமாகவும் தண்ணீர் திவால் நிலைக்கு தள்ளப்படுகிறோம். அதாவது நகரங்களில் நிலப்பரப்பு முழுவதும் கான்கிரீட் பூசப்பட்டு, மழைநீர் பூமிக்குள் செல்வது தடுக்கப்படுகிறது. மேலும் 80 சதவீத கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல், நீர் நிலைகளில் கலந்து நன்னீரை மாசுப்படுத்துகின்றன.

மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்காகத்தான் நடக்கும் என்ற பேச்சுகள் வெறும் யூகமாக சொல்லக்கூடிய வார்த்தையோ, கற்பனைக் கதையோ அல்ல. அது நிதர்சனமான உண்மை என்பதை ஐ.நா.வின் ‘தண்ணீர் திவால்’ அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. இது பல கோடி மக்களின் தாகத்தை மட்டுமல்ல, உலகளாவிய உணவுப் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

தமிழ்நாட்டின் நிலை

ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில், இந்தியா உலகளாவிய தண்ணீர் திவால் நிலையின் மையப்புள்ளியாக இருக்கிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், தெற்கு ஆசியாவிலேயே மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பகுதிகளில் ஒன்றாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிலும் சென்னை நகரம் உலகளவில் தண்ணீர் திவால் நிலையை நோக்கி வேகமாக நகரக்கூடிய 25 நகரங்களில் ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளது. சென்னை 2019-ல் சந்தித்தது போன்ற தண்ணீர் இல்லாத நிலை (டே ஜீரோ) மீண்டும் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் விழித்துக்கொள்ளவில்லை என்றால் பேராபத்து நமக்குதான்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com